உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] சௌமிய - ஐப்பசி - 10—11—69 [ இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடவால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## காலனை வீடுசெய்த கழல்

யாதோர் உயிரும் தான் எத்துணைத் துன்பத்தை அடைந்திருப்பினும் இருக்கும் உடம்பைவிட்டு நீங்க விரும்புதல் இல்லை; அவ்வுடம்பில் இருக்கவே பின்னும் பின்னும் விரும்புகின்றது. இன்னும் கூர்ந்து நோக்குவோமாயின், உடல் இன்பத்தைத் தரும் நிலையில் இருக்கும் காலத்தைவிடத் துன்பத்தைத் தரும் நிலையை அடையும் பொழுதுதான் உயிர் அதனிடம் மிக்க விருப்பங் கொள்கின்றது என்பது தெளிவாகும். இதனையே,

" இழத்தொறும் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறும் காதற் றுயிர் "

என்றார் திருவள்ளுவர்.

யாதேனும் ஓர் உயிர் தான் உள்ள உடம்பினின்றும் நீங்கும் நிலை வருவதாக அறியின், அஃது அடையும் அச்சம் அளவிடப்படுமோ! தாயுமான அடிகளே, "தேகம் நீங்கும் என எண்ணிலோ நெஞ்சம் துடித்தயருவேன்" என்கிறார். இவ்வாறாயின், ஓர் உயிரை அதன் உடம்பினின்றும் நீங்கச் செய்தல் எத்துணைக் கொடுமையான செயல் என்பது விளங்கும். இதனை விளக்கவே பிற உயிரைக் கொல்பவரைத் திருவள்ளுவர், 'கொல்பவர்' என்று ஒரு சொல்லாற் கூறாது "உயிர் உடம்பின் நீக்கியார்" என்று பல சொற்களாற் கூறினார். எனவே, ஓர் உயிரை அதன் உடம்பினின்றும் நீக்காதிருப்பதினும், அங்ஙனம் நீங்கும் நிலை அதற்கு உளதாமாயின், அந்நிலையை நீக்கி அதனைக் காத்தல் எத்துணையோ சிறப்புடைப்பேரறமாகும் என்பது தெளிவாம்.

ஆயினும், உலகில் உள்ள நிலைமை என்ன? ஓர் உயிரை அதன் உடம்பினின்றும் நீக்குதல் எல்லார்க்கும் இயல்வதாயும், அதனை அதன் உடம்பினின்றும் என்றும் நீங்காதவாறு நிலை பெறச் செய்தலோ அல்லது நீங்கிய உயிரை மீட்டும் அது நின்ற உடம்பில் புகுந்து வாழச்செய்தலோ ஒருவருக்கும் இயலாததாய் இருக்கின்றது. ஓர் உயிரை யாரும் அதன் உடம்பினின்றும் நீக்காமலே இருப்பினும், ஒருகாலத்தில் ஒருவன் நீக்கிவிடுகின்றான். அவன் யாவன் எனின், அவன் தான் 'இயமன்' என்பவன். இரண்டறக் கலந்து ஒன்றாய் வாழும் உயிரையும், உடம்பையும் வேறு வேறாக இருகூறு படுத்துதலால் இவன், 'கூற்றுவன்' எனப்படுகின்றான். இவனால் விளையும் இறப்பைவிடப் பெரிய துன்பம் வேறில்லாமையால், இவனை நினைக்கும்பொழுதே உயிர்கள் நடுக்கம் எய்துகின்றன. "சாதலின் இன்னாதது இல்லை" என்று திருவள்ளுவரும் கூறினார். இத்தன்மையான இன்னாமையைத்தரும் இக் கூற்றுவனைக் கடந்தவர் உலகில் ஒருவரும் இல்லை.

இந்நிலையில் இவனைத் தான் கடந்தமையேயன்றித் தன்னை அடைந்தாரையும் கடப்பிப்பவன் ஒருவன் உளன்

என்றால், அவனிற் சிறந்தார் ஒருவர் இருத்தல் கூடுமோ! கூடாது. கூற்றுவனைக் கடந்தாரும், கடப்பிப்பாரும் இல்லாத இவ்வுலகிலே அவ் விருபெருமையும் உடையவனாக ஆன்றோர் சிவபெருமானையே கூறிவருதல் மார்க்கண்டேயரது வரலாறு கூறும் புராணமாக அமைந்துள்ளது. அவ்வரலாற்றின் சுருக்கம் வருமாறு :

'மிருககண்டூய முனிவர் புதல்வர் 'மிருகண்டு' என்பவர் நெடுநாள் மகப்பேறின்மையால் வருந்தி, 'மருத்துவதி' என்னும் தம் மனைவியோடும் சிவபெருமானை நோக்கித் தவம் செய்யச் சிவபெருமான் அவர் முன் தோன்றிக் காட்சியளித்து 'நீ வேண்டியது யாது' என்று வினவியபொழுது முனிவர், 'மகப்பேறு தந்தருள வேண்டும்' என்று விண்ணப்பித்தார். சிவபெருமான், 'அங்க ஈனமும், அறிவின்மையும் உடையவனாய் நூறாண்டு வாழும் புதல்வன் வேண்டுமா? எல்லா அழகும் நிரம்பப் பெற்றுப் பேரறிவும், எம்மிடத்தில் பேரன்பும் உடையவனாய்ப் பதினாறாண்டு வாழும் புதல்வன் வேண்டுமா' என்று கேட்க, மிருகண்டு முனிவர், 'பின்னர்க் கூறியவாறு பதினாறாண்டு வாழும் மகனையே தருக' என்று சொல்ல, 'அவ்வாறே தந்தோம்' என்று அருளிச்செய்து சிவபெருமான் மறைந்தருளினார்.

அதன்பின் மிருகண்டு முனிவர் மனைவியார் கருவுற்றார். முனிவர் திங்கள்தோறும் செய்யவேண்டிய நற்சடங்குகள் அனைத்தையும் செய்துவரப் பத்தாந் திங்களில் சிவபெருமான் அருளியவாறே ஓர் அழகிய ஆண்மகவு பிறந்தது. முனிவர் மகிழ்ந்து, 'மார்க்கண்டன்' என நாமகரணம் செய்து, பிற சடங்குகளையும் செய்து இனிதுவளர்த்து, உரிய பருவத்தே வித்தியாரம்பம், உபநயனம் முதலியவைகளையும் செய்வித்தார். மார்க்கண்டர் இளமையிலே எல்லாக் கலைகளும் கற்றுக் கலை நிரம்பிய மதிபோல் பதினாறு வயதை அடைந்து அழகுடன் விளங்கினார். பதினாறும் ஆண்டு தொடங்கியதும் தாய்தந்தையர் தம் மகனைக் காணுந்தோறும் மகிழ்ச்சி எய்தாமல், அவலம் தோன்ற நின்றனர். மார்க்கண்டர் காரணம் அறியாது திகைத்து, ஒருநாள் பெற்றோரை வணங்கி,' நீங்கள் கவலையுறக் காரணம் யாது' என்று வினவினார். அவர்கள் சிவபெருமான் தந்த வரத்தைச் சொல்லி, ஆண்டு பதினாறு அணுகி

யதைக் கூறி வருந்தினர். புதல்வராகிய மார்க்கண்டர் 'நீங்கள் வருந்த வேண்டா; உங்கட்கு வரம் அளித்த அப்பெருமானையே வழிபட்டு நீடிய வாழ்நாள் பெறுவேன்' என்று சொல்லி அவர்களைத் தேற்றிச் சென்று காசியை அடைந்து மணிகர்ணிகைத் துறைப் பக்கத்தில் உள்ள சிவாலயத்தை அணுகிச் சிவபெருமானை வணங்கி, அதற்குத் தென்பால் ஓர் இலிங்கம் தாபித்து நாள்தோறும் சிவபெருமானை நியமமாக வழிபட்டு வந்தார்.

பதினாறாண்டு முடிந்த அன்று கூற்றுவன் தன் தூதர்களை அனுப்ப, அவர்கள் மார்க்கண்டரது சிவபூசை வலிமையால் அவரை அணுகமாட்டாது திரும்பிச்சென்று தம் தலைவனிடம் தங்களால் இயலாமையைத் தெரிவித்தனர். பின்னர் இயமன் தன் அமைச்சனாகிய காலனை அனுப்பினான். அவனும் அவரை வலிதிற் பற்றிச்செல்ல இயலாதவனாய் நயவுரைகூறி அழைத்தான். மார்க்கண்டர் அதையேற்காது மறுத்தமையால், திரும்பிச்சென்று கூற்றுவனிடம் தெரிவித்தான். கூற்றுவன் சினம் மிக்கவனாய்த் தானே கடாவின்மேல் ஏறி மார்க்கண்டரை அணுகி, முன்னே நயவுரைகள் பல கூறினான். அவர் அவைகளைப் பொருட்படுத்தாது பூசையில் இருக்க, யமன் சினந்து தனது பாசத்தைவீசி இலிங்கமூர்த்தியுடன் மார்க்கண்டேயரைச் சேர்த்து இழுக்க, மார்க்கண்டேயர் அப்பொழுதும் பூசையில் மாறாது இருத்தலும் சிவபெருமான் இலிங்கத்திநின்றும் தோன்றி, 'அஞ்சற்க' என்று மார்க்கண்டேயருக்கு அபயம் அளித்து, 'நம்மை வழிபட்டு நிற்பவன்மீது மதியாது பாசம் வீசினான் இவன்' என்று சினந்து, இடக்காலால் அவன் மார்பில் உதைக்க, யமன் அலறித்துடித்து நிலத்தில் வீழ்ந்து உயிர்துறந்தான். பின்பு மார்க்கண்டேயர் சிவபெருமானை மகிழ்வுடன் துதித்து என்றும் பதினாறு வயதாய் இருக்கும் வரத்தைப் பெற்றுத் தம் பெற்றோர்பால் மீண்டார். நிகழ்ந்தவற்றை அறிந்து அவர்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தனர்.

பல்லாண்டுகட்குப் பின்னர் நிலமகளது பாரத்தை நீக்க வேண்டி மால், அயன் முதலிய தேவர் பலரும் சிவபெருமானிடம் சென்று முறையிட, அவர்தம் வேண்டுகோளுக்கு

இரங்கிச் சிவபெருமான் யமனை உயிர்ப்பித்து, 'இனி நம் அடியவர்பால் அணுகற்பாலையல்லை' என அருள்செய்து விடுத்தார். அன்றுமுதல் யமன் மார்க்கண்டேயரது வரலாற்றைச் சொல்பவர் கேட்பவர்பாலும் அணுக அச்சங்கொண்டவனாயினன்.'

இத்தகைய வரலாற்றால் காலத்தைக் கடந்த காலகாலனாய் நின்று, தன்னை அடைந்தவர்க்கும் யமபயத்தைப் போக்கியருளுகின்ற முழுமுதற்பொருள் சிவபெருமானே என முன்னோர்கொண்டு வழிபட்டு வந்தமை நன்கு புலனாகின்றது.

“ கூற்றம் குதித்தலும் கைகூடும், நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு ”

எனத் திருவள்ளுவரும் இவ்வரலாற்றைக் குறிப்பாற் கூறியுள்ளார். இம் முழுமுதற்றன்மையை இவ்வரலாறு கொண்டு அப்பர் பெருமான் தமது தசபுராணத் திருப்பதிகத்துள், 'தேவர்களாலும் தங்கள் முடியின்மேற்கொண்டு வணங்கும் கழல், காலனை வீடுசெய்த கழலே' என அறிவுறுத்தியருளினார். அதனை உணர்ந்து அக்கழலையே அனைவரும் தலைமேற்கொண்டு வணங்கி, நமார்க்குங் குடியல்லோமாய், நமனையஞ்சாது, நரகத்தில் இடர்ப்படாது, ஏமாப்புடன் பிணிமூப்புச் சாக்காடு இன்றி, எந்நாளும் இன்பமே பெற்று வாழ்வோம். நாவுக்கரசர் காலனை வீடுசெய்த கழல்பற்றி அருளிச்செய்த பாடல் இது.

நீலநன் மேனி செங்கண் வளைவா ளெயிற்றன்
எரிகேசன் நேடி வருநாள்
காலைநன் மாலை கொண்டு வழிபாடு செய்யு
மளவின்கண் வந்து குறுகிப்
பாலனை ஓட ஓடப் பயமெய்து வித்த
உயிர்வௌவு பாசம் விடுமக்
காலனை வீடு செய்த கழல்போலு ம் அண்டர்
தொழுதோது சூடு கழலே.

குருபாதம்

குருவ நள்

# அருள்நெறியும் அறநெறியும்

## அறவுணர்வு

மக்கள் உள்ளத்தில் தோன்றுகின்ற உணர்வுகளை மூன்ருகப் பிரிக்கலாம். அவை, விலங்குணர்வு, மக்கள் உணர்வு, தெய்வ உணர்வு என்பன. விலங்குணர்வு, பின்விளைவைச் சிறிதும் உணராமல் அவ்வப்பொழுது உண்டாகும் சூழ்நிலையை மட்டும்உணர்ந்து, அந்தச் சூழ்நிலை எதுவாயினும் அதனோடே ஒன்றுபட்டுப் போவது. இதுவே 'புலன் உணர்வு' எனப்படும். இதனை யாவரும் - எந்த உயிரும் விரும்புவதில்லை. ஒவ்வோர் உயிரும் தனக்கு உண்டாகின்ற புலன் உணர்வில் தான் மயங்கிநிற்பினும், பிற உயிர்கள் அதை விரும்பாது வெறுக்கின்றன. ஒவ்வொருவனும் தன்தன் பசிக்குத் தான் பிறரைத் துன்புறுத்தி உண்டு வாழ நினைப்பினும், அதனை அவனையொழிந்த பிறர் விரும்பாது வெறுக்கின்றனர். எல்லாருடைய நிலைமையும் இதுவே ஒவ்வோர் உயிரும் தன்தன் பசிக்குத் தான் பிற உயிரைக் கொன்று தின்ன விரும்பும் பொழுது, கொல்லப்படும் உயிரின் இனங்கள் அதனை விரும்பாது வெறுக்கின்றன. எனவே, வெறும் புலனுணர்வு எல்லா உயிர்களாலும் வெறுக்கப்படுதல் தெளிவு. அதனுல், வெறும் புலனுணர்வு, 'விலங்குணர்ச்சி' எனப்படுகின்றது. ஆகவே, வெறும் புலனுணர்வு மட்டும் உடையோர், பிறப்பால் மக்களேயாயினும், உணர்வால் விலங்குகளாகவே எண்ணப்படுகின்றனர். பிற உயிருக்கு வரும் துன்பத்தைத் தனக்கு வரும் துன்பத்தோடு ஒப்ப மதிக்கும் நிலைமை இல்லாதபொழுது மக்களறிவிற்கு என்ன சிறப்பு உண்டாகும்! ஒரு சிறப்பும் உண்டாகாது என்பதையே திருவள்ளுவர்,

> "அறிவினன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்போல் போற்ருக் கடை"

எனக் கூறினர். இதுபற்றியே, பிற உயிருக்குத் துன்பம் செய்தல், கொலை செய்தல், புலால் உண்ணல் முதலிய செயல்கள் விலங்குச் செயல்களாக எண்ணி வெறுக்கப்படுகின்றன. வைதல், புறங்கூறல், வஞ்சித்தல், நடுவுநிலையின்மைபோல் வனவும் ஓரளவு விலங்குணர்ச்சிகளின்பாற் படுவனவே. இவற்றை எந்த நன்மகனும் மதிப்பதில்லை; விரும்புவதில்லை. இவ் விலங்குணர்ச்சி உடையவர்களையே உலகம், 'கீழ்மக்கள்' எனக் கூறும்.

இவ் விலங்குணர்ச்சிகளின் இழிவை உணர்ந்து அவற்றை வெறுத்தொதுக்கும் நிலையே அற உணர்வின் (தரும சிந்தனையின்) முதற்படியாகும். இது, தன்னால் பிற உயிருக்கு நன்மை இல்லையாயினும், தீமையேனும் உண்டாதல் கூடாது என்று எண்ணும் நிலைமையாம். இதனையே சங்கப் புலவர் ஒருவர்,

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

என்று கூறினர். எனவே தான் வாழ நினைக்கும்பொழுது, பிற உயிருக்குத் தீங்கு சிறிதும் இல்லாது வாழ நினைப்பது அறஉணர்வின் முதல்நிலையாகும். இதனையுடைய மக்களே மக்களாக மதிக்கப்படுவர். இவ்வுணர்வில், தனக்குத் தீங்கு செய்யும் உயிர்க்குத் தான் தீங்குசெய்தல் தவறெனப்படாது. எனவே, இவ்வுணர்வே மக்களுணர்வின் பொதுநிலையாம். இதனை உடையோர் 'பொதுமக்கள்' எனப்படுவர்.

இனி, 'தான் நலம் பெறுதல் பெரிதன்று; தனது நலத்தினும் பிற உயிர்களின் நலமே பெரிது' என மதித்துப் பிற உயிர்களது நலத்தின்பொருட்டுத் தனது நலத்தினைத் துறக்க முற்படுதல் அற உணர்வின் இடைநிலையாம். அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்துக் கொள்ளும் பொறை, தன்னுயிர் நீப்பினும் தான் பிறிதின் உயிரை நீக்காமையாகிய கொல்லாமை, இன்னா செய்தார்க்கும் இனியவே செய்தல், ஊருணி நீர்போலத் தனது பொருளை யாவரும் எந்தத் தடையும் இன்றிப் பயன்படுத்திக்கொள்ள வைக்கும் ஒப்புரவு முதலியன எல்லாம் அறத்தின் இடைநிலையாகிய உணர்வினால் விளைவனவாம். இவர்களையே,

"தமக்கென வாழாப் பிறர்க்குரி யாளர்"

"தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர்"

'ஒப்புரவாளர்'

என்றெல்லாம் உலகம் உயர்த்திப் பேசும்; 'தெய்வத்தின் அவதாரம்' என்று சொல்லி வணங்கவும் செய்யும். இந்நிலை மக்களுணர்வின் சிறப்பு நிலையான இதனையுடையோர், 'நன் மக்கள்' என உயர்த்திச் சொல்லப்படுவர். பொதுமக்கட்கும், நன்மக்கட்கும் உள்ள புலனுணர்வு வெறும் புலனுணர்வாகா மையால், அவை விலங்குணர்வு எனப்படாது, மக்களுணர்வே யாகும். ஆகவே, இவர்கள் ஈட்டும் பொருளே 'பொருள்' என்றும், நுகரும் இன்பமே 'இன்பம்' என்றும் சொல்லப் படும். இவற்றைத் திருவள்ளுவர்,

"திறன் அறிந்து - தீதின்றி வந்த பொருள்"

என்றும்,

"அறத்தான் வருவதே இன்பம்"

என்றும் கூறினர்.

பொதுமக்களும், நன்மக்களும் என இருவகையினராகச் சொல்லப்படுவோர் அனைவரும் மறுபிறப்பைப் பற்றியோ, சுவர்க்க நரகங்களைப் பற்றியோ உறுதியான நம்பிக்கை கொண்டிருப்பவர்கள் எனக் கூற இயலாது. இவைகளில் உறுதியான நம்பிக்கை கொண்டு, தமக்கும், பிறர்க்கும் இம்மை நலத்திற்குமட்டுமன்றி மறுமை நலத்திற்கும் ஆவன செய் வோரே, 'பெருமக்கள்' அல்லது 'பெரியார்' என்று சொல்லப்படுவர். மறுமையில் நம்பிக்கை உடையோர் எவரும் வினையில் நம்பிக்கை உடையோராய் இருப்பர். அதனால் அவர்கள் இயல்பாகவே தீநெறியின் நீங்கி நன்னெறியில் நிற்பர். புறநானூற்றுப் புலவர் ஒருவர், "நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர் - முறைவழிப் படூஉம் என்பது திறவோர் காட்சியின் தெளிந்தனம்" என வினையில் நம்பிக்கையுடைமை யால், "பெரியோரை வியத்தலும் இலமே - சிறியோரை

இகழ்தல் அதனினும் இலமே" என்றது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். "ஆருயிர் முறைவழிப் படுதலைத் தெளிந்தனம்" என்றமையால், இவர் மறுமையை நன்கு தெளிந்தவராதல் வெளிப்படை. வினையிலும், மறுமையிலும் நம்பிக்கை உள்ள நிலை அறவுணர்வின் முடிந்தநிலையின் முற்பகுதியாம்.

வினையில் நம்பிக்கை இருப்பினும், இல்லாதொழியினும் வினை தன் பயனைக் கொடுத்தே தீரும். ஆயினும், வினை பயன் தருவது இறைவனது அருளாலன்றித் தன்னாலே ஆகாது. ஆகவே, பயனைத் தருவிப்பதாகிய இறைவன் திருவருளை உணர்ந்து அதன்வழி நிற்போர், 'அருட்பெருமக்கள்' எனப் படுவர். 'இவ்வருட்பெருமக்கள் இறைவன் திருவருளில் இருப்ப தால் அறவுணர்வு உடையராய் இருப்பரோ' எனச் சிலர் ஐயுறுகின்றனர். அங்ஙனம் ஐயுறக் காரணம் இல்லை. ஏனெனில் அவர்கள், "அஞ்சுவது, யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை" எனக் கூறுதல், இறைவனை அடையாத முன்பு செய்த வினை அடைந்தபின் வந்து தாக்காதவாறு அவனது திருவருள் காக்கும்' எனக்கூறுதலேயன்றி, 'அவனை அடையப்பெற்ற பின்னர் எதனைச் செய்யினும் அவன் வாளா இருப்பான்' என்னும் கருத்தினாலன்று. இதனை இனிது விளக்கவே சுந்தரமூர்த்தி நாயனாரது வாழ்க்கையில் அவர் சங்கிலியார்க்குச் செய்துகொடுத்த சூள் பிழைத்தமை காரணமாகக் கண்ணொளி மறைந்த ஓர் நிகழ்ச்சி நிகழ்ந்தது. இதனை அவர் தாமே,

"பிழையுளன பொறுத்திடுவர் என்றடியேன் பிழைத்தக்கால்
பழியதனைப் பாராதே படலம்என்கண் மறைப்பித்தாய்"

என்று வெளிப்படையாக எடுத்தருளிச் செய்தார். ஆகவே இறைவனது திருவருள் கைவரப்பெற்ற அருட்பெருமக்கள் உள்ளத்தில்தான் 'நல்லதற்கு நன்மையும், தீயதற்குத் தீமையும் இறைவன் தப்பாது தருவான்' என்னும் அறவுணர்வு பெரிதும் விளங்கி நிற்பதாம். இதைத் திருமூலர் திருமொழியொன்றால் நன்குணரலாம்.

தான்முன்னம் செய்த விதிவழி தானல்லால்
வான்முன்னம் செய்தங்கு வைத்ததோர் மட்டில்லை
கோன்முன்னம் சென்னி குறிவழி யேசென்று
நான் முன்னம் செய்ததே நன்னில மானதே.

இதில் திருமூலர் திருக்கயிலையிலிருந்து அகத்தியரைக் காணப் புறப்பட்ட தாம் விரைவில் அதனை முடித்துக்கொண்டு மீண்டும் திருக்கயிலையை அடைய வேண்டுவது முறையாய் இருக்க, அவ்வாறின்றி, 'மூலன்' என்னும் ஆயனது உடம்பில் புகுந்து ஆவடுதுறையில் நெடுங்காலம் தங்கவேண்டி வந்ததற்குக் காரணம் தாம் செய்த வினையே என்பதைக் குறிப்பிடுகின்றார். சேக்கிழார் இவ்வாறு கூறுது, "சிவபெருமான் தாம் தந்த ஆகமப்பொருளைத் தமிழால் செய்தற்பொருட்டுத் திருமூலரை இவ்வாறு நிலவுலகில் தங்கச்செய்தார்" என்று கூறினும், திருவாவடுதுறைப் புராணம் மேற்காட்டியவாறே கூறுகின்றது. 'பெரியோரை உலகநலத்தின் பொருட்டு மண்ணுலகிற்கு அனுப்ப நினைக்கும்பொழுதும் இறைவன் யாதேனும் ஒருமுன்னிலையால் அனுப்புவதன்றி, வாளா அனுப்புவதில்லை' என்பது சுந்தரரது வரலாற்றால் இனிது விளங்குதலின், திருவாவடுதுறைப் புராணம் கூறுதல் சேக்கிழாரது திருமொழிக்கு மாறாவதன்று. ஆகவே, அருட்பெருமக்களது திருவுள்ளத்தில் அறவுணர்வு எத்துணைச் சிறந்து விளங்குகின்றது என்பது தெளிவாகும்.

அருட்பெருமக்களது உள்ளத்தில் அறவுணர்வு இறைவன் அருளுணர்வோடு ஒன்றி விளங்குகின்றது. இதுவே அறவுணர்வின் முடிந்தநிலை. "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி - தொகுத்தார்க்கும் துய்த்த லரிது" என்னும் திருக்குறள் இந்நிலைக்கு வழி வகுத்துத் தருகின்றது. எனவே, முதற்கண் விலங்குணர்ச்சியைப் போக்கி மக்கட் பொதுப் பண்பினை உண்டாக்கியும், பின்னர் நன்மக்கள் நிலையை அடைவித்தும், அதன் பின்னர்ப் பெருமக்கள் இயல்பை வருவித்தும், இறுதியாக அருட்பெருமக்களது நிலைக்கு வழி வகுத்தும் நிற்பதே உண்மை அறநூல் என்பது இனிது விளங்கும். இவை அனைத்தும் திருக்குறளில் அமைந்திருத்தல் ஊன்றி நோக்கின் விளங்குவதாம். இறுதியிற் கூறிய இருபெருமக்களது உணர்வே தெய்வ உணர்வாம்.

அருளுணர்வைக் கொள்ளாது அறவுணர்வை மட்டுமே உடையவர், வினையாகிய கட்டினைமட்டும் உணர்வாரன்றி, அதனினின்றும் மீளும் வழியை உணரமாட்டார்; அருளுணர்வையும் உடன்கொண்டவரே அவ்வழியை உணர்வர். அதனையும் திருமூலரது திருமந்திரத்தில் காண்கின்றோம்.

செத்திலென் ! சீவிலென் ! செஞ்சாந் தணியிலென் !
மத்தகத் தேஉளி நாட்டி மறிக்கிலென் !
வித்தகன் நந்தி விதிவழி யல்லது
தத்துவ ஞானிகள் தன்மைகுன் றாரே,

வானின் றிடிக்கிலென் ! மாகடல் பொங்கிலென் !
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென் !
தானொன்றி மாருதம் சண்டம் அடிக்கிலென் !
நானொன்றி நாதனை நாடுவன் நானே

என்றாற்போலும் திருமந்திரங்களைக் காண்க. "வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென்" என்பது முதலாக வரும் அப்பர் திருமொழியும் இவ்வாறே உள்ளன. இவற்றையே,

"இருள்சே ரிருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

என்னும் குறள்கள் தெரிவிக்கின்றன. இதனால் அருள்நெறியில் அருளுணர்வோடு கூடிநிற்கும் அறவுணர்வே, அறநெறியில் தனித்தெடுத்து விரித்துரைக்கப்படுகின்றது என்பதை உலகம் உணர்ந்து உய்வதாக.

# ஜீவன் முக்தி அல்லது மோக்ஷம்

### சுசீந்திரம். திரு. நீலகண்ட சர்மா

நிர்குணப்பிரம்மமானது அவாங்மனஸகோசரம் (अवाङ्मनसगोचरम्) என்று சொல்லப்படுகிறது. வார்த்தைகளால் நிருபிக்க முடியாதது. மனதுக்கு எட்டாதது பரப்பிரம்மம் என்று பொருள். அதிலிருந்து பிரிந்து மாயையோடு ஒன்று சேர்ந்து தனது கர்மங்களின் பலனை அனுபவிக்கிறது. ஜீவாத்மா - கர்ம பலன்கள் அனுபவித்துத் தீரும்போது கடவுள் கருணையால் தெளிந்து விளங்கும் உண்மையை அறிந்து ஸம்ஸார பந்தத்தில் நின்று விடுவிக்கப்படுகிறான் மனிதன். சமுத்திரத்தில் சேரும் நதி ஜலம்போல் பரமாத்மாவில் ஜீவாத்மா ஒன்று சேருவதற்கு அவசியமான விடுதலை (ஸம்ஸார பந்தத்திலிருந்து உள்ள விடுதலை) தான் ஜீவன் முக்தி அல்லது மோக்ஷம். அதை அடைவதற்குள்ள வழியைக் காட்டுகிறார் ஆசாரிய ஸ்வாமிகள் :-

सत्सङ्गत्वे निस्सङ्गत्वं निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।
निर्मोहत्वे निश्चलतत्वं निश्चलतत्वे जीवन्मुक्तिः ॥

(ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம்
நிஸ்ஸங்கத்வே நிர்மோகத்வம்
நிர்மோகத்வே நிச்சலதத்வம்
நிச்சலதத்வே ஜீவன் முக்தி:)

ஸத்துக்கள், நல்லவர்கள் — அடியார்கள் அவர்களோடு தொடர்பு வைத்துக்கொண்டிருந்தால் (நாளடைவில்) நிஸ்ஸங்கத்வம் — ஸங்கமில்லாதிருத்தல். அதாவது மண், பெண், பொன் இவைகளில் பற்று இல்லாதிருப்பது ஏற்படும். அப்படி பற்றுதல் இல்லாமல் போனால் நிர்மோகத்வம், மோகமில்லாமலிருப்பது; அதாவது அஞ்ஞானத்தால் நன்மை, தீமை, சரி, தப்பு தெரியாமல் இருந்தது ஞானம் உதயமாகும். அதிலிருந்து நிச்சலதத்வம்; அதாவது ஆதியும் அந்தமுமில்லாத அகண்ட சச்சிதானந்த ஸ்வரூபனாகிய ஈசனுடைய ஸாக்ஷாத்காரம் (அனுபவித்தறிதல்) கிட்டும்—அந்த நிமிஷத்திலேயே மனிதன் ஜீவன் முக்தனாகிறான்—அதிலிருந்து ஜீவாத்ம பரமாத்மாக்களுடைய ஐக்கியமேற்படுகிறது.

# கரந்து நில்லாக் கள்வன்

திரு. T. N. அருணாசலம் B. A., B. L.,

பரந்து பல் ஆய் மலரிட்டு முட்டாது அடியே இறைஞ்சி
இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம்
கரந்து நில்லாக் கள்வனே. நின்தன் வார்கழற்கு அன்பு எனக்கு
நிரந்தர மாய் அருளாய் நின்னை ஏத்த முழுவதுமே.

இது திருவாசகம், திருச்சதகத்தில் உள்ள 6 ஆவது பாடல். இந்தப் பாடலில், 'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம் கரந்து நில்லாக் கள்வனே' என்ற பகுதிக்கு புனித G. U. போப் அவர்கள் செய்துள்ள மொழி பெயர்ப்பு பின் வருமாறு :- 'They deemed that all they sought they should obtain; and from these loving hearts, in mystic guile, Thou hidest still, abiding not.' 'They' என்றது 'பரந்து பல் ஆய் மலரிட்டு முட்டாது அடியே இறைஞ்சும்' அன்பர்களை. 'இறைவா, இவர்கள் உன்னை இறைஞ்சி, இரந்த எல்லாம் தமக்கே பெறலாம் என நினைக்கின்றார்கள்; ஆனால், நீயோ இந்த அன்பர்கள் உள்ளங்களிலே நிலைபெறாமல், சொலற்கரிய சூழலாக ஒளிந்தே இருக்கின்றாய்' என்பது மேலே உள்ள ஆங்கில மொழிபெயர்ப்பின் சற்றே விரிவானதொரு தமிழாக்கம். 2. போப் அவர்களின் திருவாசக மொழி பெயர்ப்பு வெளியிடப் பட்டது 1900 த்து ஆண்டில். இது இங்கிலாந்திலேயே அச்சிடப்பட்டு வெளிவந்தது. நம் தமிழகத்திலே, திருவாசகம் முழுமைக்குமே எழுதப்பட்டு வெளிவந்துள்ள உரைகளில், நான் பார்க்கநேர்ந்த அளவிலே, காலத்தால் முற்பட்டது பேராசிரியர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் உரை. இதன் முதற் பதிப்பு 1947 இல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்பிறகு, சற்றேறக்குறையப் பத்து உரைகள் பல அறிஞர்களால் எழுதப் பட்டு வெளிவந்துள்ளன. இவைகளில், பிள்ளையவர்களின் உரையல்லாது, மூன்று இதர உரைகளைப் * படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

---

*(1) திருவாவடுதுறை ஆதீன உரை (1964)

(2) தவத்திரு. நித்தியானந்தர் உரை (1965)

3. நான் படித்த தமிழக உரைகளில், மேற்சொன்ன பாடலின் பகுதிக்குப் பொதுவாகக் கூறப்பட்ட பொருள் : ' நின்பால் வேண்டியன எல்லாம் தமக்கே பெறலாம் என்ற உறுதியுடைய அன்பர்கள் உள்ளத்தில் ஒளித்து நில்லாமல் பிறர்க்கு ஒளிக்கும் கள்வனே ' என்பதாம். அன்பருள்ளத்து இறைவன் மாமணியுள் சோதிபோல் வெளிப்பட்டு எங்குமாய் நிற்பனுதலின் ' கரந்து நில்லா ' என்றும், அன்பு நிலையிற் குறைபட்டார்க்கு அவருயிரோடு உடனுக ஒன்றியிருந்தும் அறியப்படாமையின் 'கள்வனே' என்றும் கூறப்பட்டிருப்பதாக ஒருரை சொல்லும். மேலும்' இதே உரை, பாடலில் உள்ள 'எல்லாம்' என்ற சொல் இறைவனை அறிதற்குரிய பரிபாகமுற்ற ஞானத்தையும், அதற்கு வாயிலான சாதனங்களையும் குறிக்குமென்றும், இவைகளையே அன்பர்கள் இறைவன்பால் வேண்டுவதாகவும் கூறும்.

4. இப்போது. நம் கவனத்திற்குரியவிஷயம் மேற்சொன்ன பாடலின் பகுதிக்கு, போப் அவர்களின் மொழிபெயர்ப்பான உரையும், ஏனையோர் உரையும் மாறுபடுவதோடு நில்லாது ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பாடாக இருப்பதேயாம். இவ்விரு உரைகளில் எது ஏற்புடைத்து என்று நாம் ஆராய்ந்தறிய வேண்டியது முறையாம்.

5. போப் அவர்கள் 'கரந்து நில்லாக் கள்வனே' என்ற சொற்றொடரில் உள்ள மூன்று சொற்களையும் தனித்தனியே கொண்டு (சொல்லப்பட்ட அன்பர்களது உள்ளங்களிலே) மறைந்து, நிலைபெருத சூழலானே என மொழிபெயர்த்திருப்பதைக் காணலாம். ஏனையோர், ' கரந்து நில்லா ' என்ற இரு சொற்களையும் ஒரே பொருளைத் தரும் கூட்டுச் சொற்களாகக் கொண்டு 'ஒளிக்காத' என்று பொருள் கண்டுள்ளார்கள். ஆனல், 'கள்வனே' என்ற சொல் ஒளித்துநில்லாத இறைவனுக்கு ஒவ்வாத அடைமொழியாகுமே என அறிந்தாராய், அவன் (சொல்லப்பட்ட அன்பரல்லாத) 'பிறர்க்கு' அதாவது, 'அன்பு நிலையிற் குறைபட்டார்க்கு' ஒளிக்கின்முன், அல்லது, அவர்களால் அறியப்படாமல் இருக்கின்முன், ஆதலாலே கள்வன் எனப்படுகின்முன் என விளக்கம் காண முயன்றுள்ளார்கள். ஆனல், இந்த 'பிறர்' யார், அவர்களும் அன்பர்கள்தாமா, ஏன் அவர்பால் மட்டும் இறைவன் கள்வன்போல் கரந்து நிற்க வேண்டும் என்ற விபரங்களோ, அதற்கான ஆதாரங்களோ பாடலில் இல்லை என்பது தெளிவு. ஆகவே, 'கள்வனே' என்ற

---

(3) தவத்திரு. சித்பவானந்தர் உரை (1968)

சொல்லைப் பாடலில் இளங்காட்டப்படாத, காட்டமுடியாத, அன்பருள்ளங்களோடு பொருத்துதல் இயலாது, ஒவ்வாது. பாடலைத் தெளிவு காணும் விழைவோடு படிப்போமானால், 'பரந்து' என்று தொடங்கும் முதல் வாக்கியம், அதனின் விரவிய சொற்கள் அச்சொற்களின் ஊடே இழையும் பொருளும் கருத்தும் எல்லாம் இயல்பாகத் தொடர்ந்து இணைந்து 'கள்வனே' என்ற சொல்லைக்கொண்டே முடிவதைக்காணலாம். 'இரந்த எல்லாம் எமக்கே பெறலாம் என்னும் அன்பர் உள்ளம்' என்ற அளவோடு நிறுத்தினால், அது பாடலின் போக்கோடு ஒவ்வாது, பொருளும் முழுமை பெறுது, முதல் வாக்கியத்தின் பகுதியாகவே நிற்பதைப் பார்க்கிறோம். 'கரந்து நில்லா' என்ற இருசொற்களையும் இப்பகுதியோடு இணைத்துக்கொண்டாலும் நிலைமை மாறுது என்பதைக் காண்கிறோம். 'கள்வனே' என்ற சொல்லைச் சேர்த்துத்தான் அவ்வாக்கியத்திற்கு முழுமை தரமுடியுமென்பதையும் அறிகிறோம்.

6. 'ஊடுவது உன்னோடு, உவப்பதும் உன்னை' என்ற அடிப்படையிலே, தமக்கும் உடையானுக்கும் ஊடே உள்ள உறவின் உரிமையாலே, மிகு காதல் அடியார்கள் அவனை எத்தன் என்றும் கள்வன் என்றும் ஏசுவதே போன்று ஏத்துவர். நாம் பொருள் தெளிய எடுத்துக்கொண்ட இந்தப்பாடலில், இறைவனைக் கள்வன் என்று சொன்னதேபோன்று, திருவாசகத்தில் மற்றும் இரண்டு இடங்களிலே மணிவாசகர் சொல்லியிருப்பதைக் காணலாம். இந்திரஞாலம்போல வந்தருளி திருவார்பெருந்துறைச் செல்வனுகித் தன்னை ஆட்கொண்ட இறைவன், வந்தது போன்றே மாயமாய் மறைந்தமையால் வருந்திய அவர் அவனைக் கருவார் சோதியிற் கரந்த கள்வனே என்பார். பிறிதோரிடத்து, வேடுவனுகி வேண்டுருக்கொண்டு காடது தன்னிற் கரந்த கள்வன் அவன் என்பார். ஆகவே, கரத்தலினுலேதான் இறைவனை அடிகள் 'கள்வனே' என விளித்தார் என்பது தெளிவு. நமது உரையாசிரியர்கள் கருத்திற் கொண்டதும் இப்படியே என்பதும் தெளிவு. ஆனல், நாம் ஊகிக்கக்கூடிய அளவில், அவர்களது ஐயம், முட்டாது அடியே இறைஞ்சும் அன்பர்களது உள்ளங்களில் இறைவன் கரந்து நில்லானே என்பதுதான். எனவேதான், அவர்கள், சொல்லப்பட்ட அன்பர்களையும் மணிவாசகரையும் தவிர்த்து, (மூன்ருமவரான) அன்பிற் குறைந்தாரது உள்ளங்களில்தான் இறைவன் கரந்து நிற்பானுதலால் அவ்வகையில்தான் அவனைக் கள்வன் என்று அடிகள் சொல்லியிருக்க வேண்டும் என ஊகித்துப் பொருள்காணத் துணிந்தார்கள் போலும். ஆனல், சாமானிய பகுத்தறிவின் அடிப்படையிலே,

உரையாசிரியர்களை நாம் சில கேட்கலாம். (இறை சீர்) கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்பதும், அவன் ஓராதார் உள்ளத்தில் ஒளிக்கும் ஒளியான் என்பதும்தான் யாவரும் அறிந்த உண்மையாயிற்றே; ஆகவே, அன்னார் உள்ளங்களில் அவன் கரந்துநிற்றல் அவன் தன்மைக்கு இயல்புதானே; இதில் வியப்படைதற்கு இடமொன்றும் இல்லையே; எனவே, அவனைக் காரணமின்றிக் கள்வன் எனப் பகர்வது பொருந்தாதே என்பது ஒரு கேள்வி. மற்றுமோர் கேள்வி; அடியவர்கள் அவனை இயல்பாக எதிர்பார்க்கும் இடத்திலோ, காலத்திலோ கரந்து நின்று ஏமாற்றம் அளித்தால்தானே அவனைக் கள்வன் எனச் சொல்லுவது பொருந்தும்; இல்லையேல், அப்படிச் சொல்வதில் பொருத்தமின்மையோடு கூட இதிலொரு கவி நயமும் காணக் கிடையாதே என்பது.

(தொடரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

One is naturally inspired on entering this great and sacred temple which is kept neat and tidy The superintendent and staff are also very courteous and helpful to the visitors. The Dharmapuram Adhinam deserves all congratulations and I wish all other temples in the state also emulate the management of the temples as under the Adhinam.

Om. Om. Om.

(Sd.) x x x
Central Intelligence Officer,
Madras.

27—10—69.

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"


**வித்துவான். திருமதி. ப. நீலா**

தமிழ்ப் பேராசிரியை, தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி.



( மலர் 28, இதழ் 11, பக்கம் 620 இன் தொடர்ச்சி )


## 23. விருத்த குமார பாலரானது

விடைமேலழகர் தழையுலாங்கையர் ஏவிய தந்திமேல் சேவகஞ் செய்தவாறு கண்டோம். அவ்விறைவனே கிழவனுகி, காளையாகிப் பின் கிஞ்சுகச் ( முருக்கிதழ் ) செவ்வாய்க் குழவியாய் மாறிய அற்புதங்கண்டு மகிழ்வோம்.

விக்ரமனுடைய ஆட்சிக் காலத்தில் மதுரையில் மறையவனெருவன் விருபாக்கன் என்ற பெயருடன் கற்பின் கொழுந்தாம் சுபவிரதையோடு இல்லறம் நடத்திவந்தான். இருவரும் மகப்பேறு குறித்து சப்தமாதர்களை நாளும் ஒன்றிய சிந்தையுடன் வழிபட்டுவந்தனர். அவர்களின் இன்னருளால் விருபாக்கனின் மங்கல மனை மாட்சி நிறைவுபெற்றது. பிறந்த பெண் மகவிற்கு கௌரி என்ற பெயரிட்டு வளர்த்தனர்.

### கலைநிறைந்த மதியோ - மங்கையோ !

பிராயம் ஐந்தாயிற்று. ஒருநாள் தந்தையை அணுகிய குழந்தை தந்தையே! இப்பிறவிநோய் தணிய உதவும் தெய்வ மந்திரம் யாது – என வினவினுள். வியப்பினல் வாயடைத்துப் போன விருபாக்கன் மலைமகளுக்குரிய மந்திரங்களை மகளுக்கு உபதேசித்தான். தந்தைபால் தெளிந்த மந்திரங்களை நாத் தழும்புறப் பயின்ருள் கௌரி. வளரும் மதியென கலைகள் நிறைந்து கன்னிப் பருவமடைந்தாள்.

**விதி வழி மதி :**

தந்தை தன் தவக்கொழுந்தினுக்கிசைய ஆதி ஆச்சிரமத்தனய், வேதவித்தாய், சைவ மாதவத்தனய், மரபினல் மேம்பட்ட மணவாளன் என்று வருவானே என்று ஏங்கும் சமயத்தில் வைணவப் பிரமச்சாரியொருவன் பிச்சையேற்க இல்லத்திற்கு வந்தான். அம்மாணியைக் (பிரமச்சாரி) கண்டவுடன் விருபாக்கன் அகமும் முகமும் மலர வரவேற்ருன். தன் கன்னியை அவனுக்கே கொடுக்க இசைந்து மனேவியையும், சுற்றத்தையும் வினவாமல் – அவன் கையில் நீர் வார்த்து – மகளைத் தத்தம் செய்தான். கலிக்கும் நூபுரமணிந்த கௌரியின் விதியும் – பலிக்குவந்தவனின் நல்வினைப் பகுதியும் ஒத்தன போலும்!

குலமும், கோத்திரமும், குடிமை நலமும் கேட்காமல் இப்படிச் செய்தானே என்று தமர் குறைப்பட்டு இதுதான் விதி வழி மதி – எனச் சலித்தனர். அவன் வைணவ மதத்தவன் என்ற செய்தி அவர்களைப் பின்னும் வேதனையுறச் செய்தது. தாயும், ஒக்கலும் பின் ஒருவாறு மனந்தேறியபின் எண்வகை மணத்துள் முதலாவதான அறநிலை – என்னும் மணமுறையில் கௌரியை மணஞ்செய்துகொடுத்தான் விருபாக்கன். தெய்வ மங்கல வரிசையோடு வந்த கன்னியைக் கைக்கொண்டு தன் னூர்போய்ச் சேர்ந்தான் கௌரிநாயகன்.

**நிழலில்லா நெடும்பாலை :**

வந்த பெண்ணின் சிவசிந்தனையும், சைவ தவவடிவுங் கண்டு அவளை வெறுத்து ஒதுக்கினர் மாமனும் மாமியும். கௌரியை மாற்றுப்பெண்ணாக ஏற்க மனங்கூசினர். ஒருநாள் அவளைத் தனியே இல்லில் வைத்துப் பூட்டித் தம்தமர் மங்கலங் காண வேற்றூர் சென்றனர்.

உள்மாசை அகற்றுவது திருநீறே என்று உபநிடதங்கள் உரைப்பக் கேட்டும் மண்மாசுபடப் பூசும் வடிவுடையார் அகன்ற பின்பு – கண்மாசு கழிய ஒரு சிவனடியாரையும் காண்கிலேனே" என கௌரி மனந்தளர்ந்தாள். சிவனடியாரிடம் அன்பிலாச் சிந்தை இரும்பு, அவனடியார் திறத்து ஒழுகா யாக்கை மரம், அவர்கள்பால் செலுத்தாத ஐம்பொறி நிறைந்த உடம்பு

பாவையே, சைவ நெறியே தவநெறி – மற்றைய நெறிகள் பவந்தரும் நெறிகளே - என்றெல்லாம் எண்ணித் தனியளாய் வருந்துகிருள் கௌரி.

சிவனடியார்க் கன்பிலாச் சிந்தையே இரும்பு
ஏவல் செய்து நாளும்
அவனடியார் திறத்தொழுகா ஆக்கையே மரம்
செவிகண் ணுதி ஐந்தும்
பவனடியா ரிடைச் செலுத்தாப் படிவமே
பாவைமறை பரவுஞ் சைவ
தவநெறியல் லாநெறியே பவநெறியென்
றனியளாய்த் தளர்வாள்.

## எண்ணம் இனிக்க வந்தான் :

கௌரியின் எண்ணம் பலித்தது. இறைவன் கயல்முள்ளன்ன நகையுடனும், சரிந்த கோவண மசைகின்ற இடையுடனும், பனிக்கின்ற தலையுடனும், தம்போல் பன்னெடுநாள் பழகிய தனிப்பெரும் புத்தகத்தைப் பக்கமணைத்துக்கொண்டு 'சாலப் பசித்துஉன்பால் வந்தோம்' – என்று கூறிக்கொண்டு வந்துநின்ருர். இல்லைப் பூட்டிப் போயினரே எமர் என்று ஏங்கினுள் கௌரி. பூட்டை உன் கரத்தால் தொடு – திறந்து விடும் என்ற அடியார்வாக்கு உண்மையானபோது அகம்மிக மகிழ்ந்த அம்மாதரசி ஐயரின் திருவடியலம்பி ஆசனமளித்து அறுசுவையுண்டிகளை விரைவில் ஆக்கிக்கொண்டுவந்தாள்.

## கனி காயாகிப் பிஞ்சான கவின் :

அடியவரை நறுமலர்கொண்டு அருச்சித்து முல்லை முகையனைய பாலடிசிலை வெள்ளிமலை எனக் குவித்து - பருப்பை செம்பொற் சிகரமென இட்டாள். நெய்யை அருவியெனச் சொரிந்தாள். மற்றைய கறிவகைகளும், சிற்றுண்டிகளும் சிறுசிறு குன்றுகளெனத் திகழ்ந்தன. இன்சொல்லும் முகமலர்ச்சியுங்கொண்டு உண்டியை அடியவரின் வாயிலூட்டினுள் வனிதை. திருவமுதுண்ட கிழவர் அமுதமுண்டவரொத்து மூப்பகன்று காளையானுர். பூசியிருந்த வெண்ணீறு கலவைச் சந்தனமாகியது. குண்டலமும் கடகமுமணிந்த அவ்விளைய வுருவங்கண்டு கௌரி பதைபதைத்து ஒதுங்கிநின்ருள்.

அந்நேரம் வேற்றூர் சென்றிருந்த மாமனும் மாமியும் வந்து கதவைப்புடைக்கவே - கௌரி செய்வதறியாது திகைத்துத் திரும்பினள். பதினறு வயது நிறைந்தவனுக இருந்த பானல்மணிகண்டன் (குவளை நிறக் கழுத்தன்) நுதற்காப் பணிந்த பசுங்குழவியாகி ஆடையிற் கிடந்து அழுதுகொண்டு இருக்கக்கண்ட உத்தமி ஓடிச்சென்று குழந்தையை அள்ளி அணைத்துக்கொண்டாள். குழந்தை ஏது என்று கேட்ட மாமனுக்கும் மாமிக்கும் - இக் குழந்தை தேவதத்தனுடையது. என்னைச் சிறிது நேரம் பார்த்துக்கொள்ளும்படிக் கூறிச் சென்றுள்ளான் என்றுள் கௌரி. (குறிக்கப்படாத ஒருவனை இப் பெயரிட்டே உலகோர் கூறுவர்).

என்பு பூண்டு இடுகாட்டில் நடமாடும் சிவனுக்கு அன்பு பூண்டான் குழவிக்கு நீ அன்பு பூண்டாய் - நீயும் எமக்காகாதவளே. குழந்தையுடன் வெளியில் செல் - என வஞ்சமனமுடையோர் கூறவும், குழந்தையுடன் தெருவில் வந்தாள். அனைத்துயிரும் ஈன்று காத்து அழிக்கும் அப்பனை உள்ளமுருகத் துதித்தாள் பேதை. தந்தைபால் தெளிந்த மலைமகளின் மந்திரத்தை நாவால் உச்சரிக்கவும் - கையிலிருந்த குழவி மறைந்தது. விடைமேல் பெருமான் உமையோடு விண்ணில் காட்சிதந்தார்.

அதிசயித்த அவனிமாக்கள் இப்பார்ப்பன மகளையும் பார்வதியின் வடிவமாகவே கண்டனர் - வணங்கி வாழ்த்தினர்.

(வளரும்)

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

**Dharmapuram Adhinam**

Sri Vaithianathaswami Devasthanam, Vaithiswarankoil.

Visited the temple on 12—10—69. The maintenance of this temple is a speciality here. The environments really contribute much for increasing the number of devotees.

(Sd.) RAMARAJ.

12—10—69. P. A. (4) to the Collector of Thanjavur.

# நான்கு

பேராசிரியர்

திரு. வ. பெருமாள் எம்.ஏ., பி.லிட்., எம்.ஆர்.ஏ.எஸ்.

(மலர் 28, இதழ் 11, பக்கம் 6-8ன் தொடர்ச்சி)

ஒருவன் தன் உள்ளத்தில் நிகழ்வதைப் புறத்தில் முகக் குறிப்பால் புலப்படுத்த அதைக் காண்பவர் அதே நிலையை அடைவது மெய்ப்பாடு எனப்படும். மெய்யில் (உடம்பு) தோன்றுவதால் மெய்ப்பாடு என்னும் பெயர் பெற்றது. மெய்ப்பாடு எட்டு என்றும் ஒவ்வொன்றுக்கும் நான்கு நிலைகளன் உண்டு என்றும் தொல்காப்பியர் தெளிவாக வரையறுத்துள்ளார். மெய்ப்பாடு சிறப்பாக நாடகத்திற்கு உரியது. எள்ளல், இளமை, பேதைமை, மடமை ஆகிய நான்கின் காரணத்தால் நகைச்சுவை தோன்றும்.

'எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகை நான்கு என்ப'

இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை ஆகிய நான்கும் அவலத்திற்குக் காரணமாகும்.

'இழிவே இழவே அசைவே வறுமையென
விளிவில் கொள்கை அழுகை நான்கே'

மூப்பு, பிணி, வருத்தம், எளிமை (ஆற்றாமை) ஆகிய நான்கு பொருள்பற்றி இரக்கம் தோன்றும்.

'மூப்பே பிணியே வருத்தம் மென்மையொடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே'

புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நான்கும் பற்றி வியப்பு தோன்றும்.

'புதுமை பெருமை, சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே'

அணங்கு (பேய், பூதம்) விலங்கு, கள்வர், இறைவன் என இந்நான்கு பொருள்பற்றி அச்சம் தோன்றும்.

'அணங்கே விலங்கே கள்வர்தம் இறையெனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே'

கல்வி, வீரம், புகழ், கொடை ஆகிய நான்கும் பெருமிதத்தை உண்டாக்கும்.

'கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே'.

உடலிலுள்ள உறுப்பை அறுத்தல், உற்றார் உறவினர்க்குக் கேடு சூழ்தல், துன்புறுத்தல், கொலை செய்தல் முதலிய நான்கு பற்றி வெகுளி தோன்றும்.

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே'

செல்வம், அறிவு, புணர்ச்சி, விளையாட்டு ஆகிய நான்கும் மகிழ்ச்சியை உண்டாக்கும்.

'செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென
அல்லல் நீத்த உவகை நான்கே'

இவ்வாறு தொல்காப்பியர் ஒவ்வொரு மெய்ப்பாட்டிற்கும் உரிய அடிப்படையான நான்கு காரணங்களை நன்கு தெளிவுப்படுத்தி யிருப்பது பெருமகிழ்ச்சிக் குரியதாகும்.

உலகத்தில் தோன்றியுள்ள உயிரினங்களின் பிறப்பை நன்கு ஆராய்ந்து உயிர்த்தோற்றத்தை நான்காகப் பகுத்துள்ளனர். சில உயிரினங்கள் கருப்பையில் தோனறுகின்றன. மனிதன் உட்பட பாலூட்டிகள் (mannar) யாவும். கருப்பை இனத்தை சார்ந்தவை. சில உயிரினங்கள் முட்டையிலிருந்து தோன்றுகின்றன. பறவைகள் யாவும் இவ்வினத்தைச் சேர்ந்தவை. செடி, கொடி, முதலிய தாவர இனங்கள் நிலத்தில் விதையிலிருந்து முளைக்கின்றன. புழு. கிருமி முதலியவை வியர்வைபோன்ற அழுக்கிலிருந்து தோனறுகின்றன. இவ்வாறு உயிரினங்கள் நால்வகைப் பிறப்புக்களாகக் காட்சியளிக்கின்றன.

உயிரினங்களின் தோற்ற வளர்ச்சியை மாணிக்கவாசகர் இனிது விளக்குகின்றார்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்

செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்'

—திருவாசகம்; சிவபுராணம்.

பெண்ணையும் பொன்னையும் ஒருங்கே போற்றிய நாடு நம் நாடு. வெறும் அணிகலன்கள் செய்வதற்கு மட்டும் பொன்னைப் பயன்படுத்தாமல் திருமண மங்கல அணி (தாலி) செய்வதற்கும் பொன்னையே பயன்படுத்திப் பொன்னுக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தனர் பண்டைத் தமிழர். பெண்ணிடம் பொன் சேர்ந்தால் பெண்ணின் உளக்குறையும் உடற்குறையும் ஒருங்கே நீங்கி விடும். 'பெண்ணின் கோணல் பொன்னிலே நிமிரும்' என்பது தமிழ்ப் பழமொழி. இத்தகைய சிறந்த பொன் சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என நால்வகைப்படும். இந்நால்வகைப் பொன்னும் மதுரை நகரிலுள்ள பொற்கடை வீதியில் விற்கப்பட்டன என்று இளங்கோவடிகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றார்.

"சாதரூபம் கிளிச்சிறை ஆடகம்
சம்பூ நதமென ஓங்கிய கொள்கையின்
பொலந்தெரி மாக்கள் கலங்களு ரொழித்தாங்கு
இலங்குகொடி எடுக்கும் நலங்கிளர் வீதியும்"

— சிலப்பதிகாரம்.

இந்நால்வகைப் பொன்னுள் சாம்பூநதமே மிக உயர்ந்தது என்பதைத் திருவள்ளுவமாலை வாயிலாக நாம் அறியலாம்.

"பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்பூநதம்
ஆவிற் கருமுனியா யானைக் — கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா" — திருவள்ளுவமாலை.

இறைவனைப் பற்றிய பேருண்மைகளையும், இறைவனுக்கும் மக்கட்குமுள்ள ஆன்மீக உறவையும், மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய சமய நெறியையும் விளக்குவது வேதம். இந்து சமயத்தில் இருக்கும் வேதத்தில், யசுர் வேதம், சாமவேதம் அதர்வண வேதம் இருக்கு வேதம் என நான்கு உண்டு. இவற்றை நான்மறை என்று குறிப்பிடுவது மரபு. நான்மறையின் மெய்ப்பொருள் முப்பாலில் அடங்கியிருக்கிறது. இதை நான்கு வகையில் போற்றுதல் வேண்டும். தலையால் வணங்க வேண்டும்; வாயால் வாழ்த்தவேண்டும், நெஞ்சத்தால் சிந்திக்க வேண்டும், செவியால் கேட்கவேண்டும். முப்பாலில் அமைந்துள்ள நான்மறையின் மெய்ப்பொருளைப் போற்றத்தக்க நான்கு நன்னெறிகளைத் திருவள்ளுவமாலை நன்கு இயம்புகின்றது.

"நான்மறையின்மெய்ப்பொருளாமுப்பொருளாநான்முகத்தோன்
தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த – நூன்முறையை
வந்திக்க சென்னியாய் வாழ்த்துக நன்னெஞ்சம்
சிந்திக்க கேட்க செவி".

வேதத்தை உணர்வதற்கு நான்கு படிகள் உண்டு. முதலாவதாகத் தக்க அறிஞரிடம் அடக்கத்துடன் பாடம் கேட்டல் வேண்டும். இரண்டாவதாகக் கேட்டவற்றை ஆழ்ந்து அமைதியாகச் சிந்தித்தல் வேண்டும் மூன்றுவதாக ஐயம்; விபரீதம் முதலியவற்றை நீக்கித் தெளிதல் வேண்டும்; நான்காவதாக மன அமைதியுடன் தியானித்தல் (நிட்டை கூடல்) வேண்டும். இந் நான்கும நான்மறையை நன்குணர நாற்படிகளாகும்.

பகைவரை வெல்வதற்கு நான்கு உபாயங்கள் உண்டு. அவற்றில் முதலாவதாக உள்ளது சமாதான முறை. இரண்டாவதாக அமைந்திருப்பது பேதம், பகைவரிடம் வேற்றுமை காட்டி முரண்படுகின்ற முறை. மூன்றும் முறை பகைவர்க்குப் பொருள் கொடுத்து வெல்வது. நான்காவதாக இருப்பது தண்டனை முறை. பகைவரைத் தண்டித்து வலிமையால் வெல்வது. இந் நான்கு உபாயங்களையும் முறையே சாமம், பேதம், தானம் தண்டம் என்று குறிப்பிடுவது வழக்கு. இந் நான்கு முறைகளிலும் தண்ட உபாயம் மிகவும் ஆற்றல் வாய்ந்தது; அத்துடன் கைமேல் பலன் அளிக்கவல்லது 'கோலெடுத்தால் குரங்கும் ஆடும்'; 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' அடி உதவுவதுபோல் அண்ணன் தம்பி உதவுவார்களா? முதலிய பழமொழிகள் தண்டனை உபாயத்தின் போற்றலை இனிது விளக்குகின்றன

காலத்தை மாத்திரை முதல் யுகம் ஈறாகப் பலவாறுப் பிரித்திருந்தனர் நம் முன்னோர் உலகத்தின் கால அளவை நன்கு கணக்கிட்டு, கிரேதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம் என்று நான்கு யுகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

> நாலுகொ ளாம் அவர் தம்முகம் ஆவன
> நாலுகொ லாஞ்சன னம்முதல் தோற்றமும்
> நாலுகொ லாம் அவர் ஊர்தியின் பாதங்கள்
> நாலுகொ லாமறை பாடின தாமே'

என்னும் அப்பர் தேவாரம் நான்கின் சிறப்புக்கு முத்தாய்ப்பு வைத்த வண்ணம் இருக்கின்றது.

இவ்வாறாக 'நான்கு' பல சிறப்பியல்புகளையும் பெற்றுத் திகழ்கின்றது.

# திருச்செந்தூர்த் திருப்புகழ்

செஞ்சொற்கொண்டல், புலவர்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

**திருப்புகழ்த் திறம் :**

இறைவன் திருப்புகழ் 'பொருள்சேர் புகழ்' என்று திருவள்ளுவரால் சிறப்பிக்கப் பட்டது. முருகன் திருப்புகழைத் தெள்ளிய இசைத்தமிழில் அருணகிரிநாதர் பாடியுள்ளார். இத் திருப்புகழ்ப் பாக்கள் பொதுவாக நோக்குமிடத்து ஒன்றேனும், நுட்பமாகப் பாகுபாடு செய்யும்போது, ஆறுபடை வீடுகட்கு உரியவை ஒரு பகுதியும், பிற தலங்கட்கு உரியவை ஒரு பகுதியும், பொதுத் திருக்குறிப்புடையவை ஒரு பகுதியும் ஆக முத்திறப் படுவனவாகும். அருணகிரியார் பாடியன பதினறுயிரம் பாக்கள் என்று கூறப்படுகின்றது. இதற்குச்சான்று பின் வரும் பாட்டாகும்:

" அருணகிரி நாதர்பதி னறு யிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர் — பரகதிக்கஃ
தேணி; அருட்கடலுக் கேற்றம் ; மனத் தளர்ச்சிக்
காணி; பிறவிக் காம் "

" திருப்புகழ் படிக்குமவர் சிந்தைவலுவாலே ஒருத்தரை
மதிப்பதிலை உந்தனருளாலே"

என்னும் மொழியும், திருப்புகழ் படிக்கும மக்கள் உள்ளத்து உயர்வினை எடுத்துரைப்பதாக உள்ளது.

இத்திருப்புகழ்ப் பாக்கள் சந்தச் சிறப்பாற் பெரிதும் மாண்புற்று விளங்குகின்றன. ஒவ்வொரு பாடலும இனிய சந்தம் பொருந்தி விளங்குகின்றன. உணர்ச்சி யற்றவர்க்கும் உள்ளத்தே திருவருள் உணர்ச்சியும் பக்தியும் தோன்றுமாறு செய்யவல்லன இவ்வமுதத் தமிழ்ப்பாடல்கள் திருச்சீரலைவாய் என்று பேசப்பெறும் திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பாக்கள் இங்கு நம் சிந்தனைக்குரியவையாக உள்ளன, எண்பத்து மூன்று திருப்பாட்டுக்கள் இத்தலத்திற் குள்ளன.

**முருகன் திருக்காட்சி :**

முருகப்பிரான், திருச்செந்திலாண்டவனின் தரிசனம் வேண்டும் திருப்பாட்டுக்கள் இவற்றுட் பல. அவற்றைப் பயிலுங்கால் முருகப்பிரானே வந்து திருக்காட்சி வழங்குவதை மெய்யன்பர் இதயங்கள் நன்குணரும் எனலாம் :

" தண்டையணி வெண்டையங் கிண்கிணிச தங்கையும்
தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே நின்
தந்தையினை முன்பரிந் தின்பவுரி கொண்டுநன்
சந்தொடமணைந்து நின் றன்புபோலக்
கண்டுற கடம்புடன் சந்த மகுடங்களும்
கஞ்சமலர் செங்கையுஞ் சிந்துவேலும்
கண்களு முகங்களுஞ் சந்திர நிறங்களுங்
கண்குளிர என்றன்முன் சந்தியாவோ" (16)

என்பது முதற்றிருப்பாட்டு

" பதறிய அங்காப் புப்பத்
தியு மறிவும் போய்ச் சங்கைப்
படுதுயர் கண்பார்த் தன்புற் றருளாயோ" (24)

என்று அருளை வேண்டும் பகுதியும் இங்குண்டு. இவ்வாறு ஊனக் கண்ணுக்கு முன் திருக்காட்சி வேண்டும் அருணகிரியார் தம் ஞானக்கண்ணாலும் திருக்காட்சி வேண்டும் பகுதியைக் காணலாம் :

" உலப்பின் ருறெனு மக்கரமுங் கமழ்
கடப்பந் தாருமுகப்ரபையுந்தினம்
உளத்தின் பார்வை யிடத்தி னினைந்திட அருள்வாயே (28)

இங்கு "உளத்தின் பார்வை" என்றுரைத்தல் ஞானக்கண்ணே யாதல் தேர்ந்துணரத் தக்கது.

இறுதிக் காலம் வருவதற்குள் திருமுருகன் திருக்காட்சி தர வேண்டுவர் அடிகள். காலனர் வெங்கொடுந் தூதர் பாசங் கொண்டு கொண்டுபோக, மைந்தர், தாய்கள் அலறிப் பின் தொடரச் செல்லுவதற்கு முன்பாக, சூலம், வாள், தண்டாயுதம், சேவல், கோதண்டம் ஏந்திய கைகளும் அழகிய மார்பும் கொண்டு, "தூயதாள் தண்டையும் காண ஆர்வம் செயும்

தோகைமேல்கொண்டு முன் வரவேணும்" (35) என்று மனம் கனிந்து வேண்டுகின்றார் அடிகள். பெண்ணெனுமாயைப் பட்டழிந்திடா முன் வருக என்றும் வேண்டுவர். (44)

" இருளாய துன்ப மருள்மாயை வந்து
எனையிர்வ தென்றும் ஒழியாதோ"

என்பதே இவரது கேள்வி. திருச்செந்தூர்த்தரிசன அநுபவம் பின்வரும் வரிகளிற் கூறப்பெறுகின்றது:

" செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வுறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்று செருகுந்தடந் தெளிதரத் தணியாத

சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவா என்றுநின் தெரிசனைப் படுவேனோ" (47)

## அறியும் அறிவும் அன்பும் :

மற்றொரு கவிதையில், 'உனை என்னுள் அறியும் அன்பைத் தர வேண்டும்' என்று விண்ணப்பிக்கின்றார். (51) இவ்வாறே "வழியடிமை அன்பு கூருமது சிந்தியேனோ" (55) என்றும் வேண்டுவர். தொண்டர் கூட்டத்தோடு கலந்து நின்று வழிபடும் பேற்றை, "பண்புடைய சிந்தை அன்பர் தங்களினுடன் கலந்து பண்புபெற அஞ்சல் அஞ்சல் எனவாராய்" (59) என்றும் விளக்குவர். அடியார் கூட்டத்தைப் பெரிதும் விழைந்த அடிகள் உள்ளம் இதனால் விளங்குவதாகும்.

## வினாள் எது ?

முருகப் பிரானைப் போற்றிவழிபடும் நாளே நன்னாள் என்பதும், அவனை வழிபடாத நாள் வீணே கழியும் நாள் என்பதும் ஓர் அரும்பாடலில் இவர் விடுக்கும் அரிய செய்தியாக உள்ளது:

' உன்புகழேபாடி நானினி
அன்புட னாசார பூசைசெய்
துய்ந்திட வீணாள்படாதருள் புரிவாயே (66)

### மாந்தர் நிலை :

உலக மாந்தர்க்காகச் சான்றோர் கருணை உள்ளம் கொண்டு வருந்துவர். 'ஐயோ! இவ்வாறு நன்னெறிச்சாராது புன்னெறிச் சேர்ந்து கெடுகின்றார்களே' எனக் கனிந்திடும் இதயப் பாங்கைத் திருச்செந்தூர்த் திருப்பாட்டு மற்றொன்றில், அடிகள் கூறிடக் காணலாம் :

" காமக் ரோதவு லோபப் பூதவி
காரத் தேயழி
காயத் தேபசு பாசத்தேசிலர்
காமுற்றேயும தென்கொலோதான் " (66)

### தவயோகியர் திறம் :

தவஞ்செய் யோகியர் தவ வாழ்வை விளக்கும் ஓர் இனிய பாடற் பகுதியும் செந்திற் செந்தமிழில் உள்ளது. "காரணம் காரியம் ஆகிய நிகழ்ச்சிகளில் உள்ள ஆராய்ச்சிகள் எல்லாம் நீங்கி, நான் என வருகின்ற தன்முனைப்பை விட்டுத் தியானத்துடன் இருந்து, உயிர்க் காற்றானது உடலின் ஊடே இயங்கி மூக்கின் மீது இரண்டுவிழி முனைகள் பாய, மனம், சொல் செயல் மூன்றும் ஒருவழிப்பட, அன்பை உடலுள்ளவரையில் விடாமல், திருவடிக்காட்சிபெற விழைந்து மிக்க தவம் செய்கின்றவர்களே தவயோகிகள்" என்கின்றார்; இந்தக் குறிப்பு இனிய பகுதியே யன்றோ ?

" காரண காரியங்களானதெலாமொழிந்து
யானெனு மேதைவிண்டு பாவகமாயிருந்து
காலுடலூடியங்கி நாசியின்மீதிரண்டு விழிபாயக்
காயமு நாவு நெஞ்சு மோர்வழி யாக அன்பு
காயம்விடாமலுன்றன் நீடிய தாள்நினைந்து
காணுதல்கூர் தவஞ்செய் யோகிகள் " (84)

### ஒன்றும் நிலை :

இறைவனுடன் ஒன்றாகி நிற்கும் வீட்டுநிலை,

" நாடியதன் மீது போய்நின்ற ஆநந்த
மேலைவெளி யேறி நீயின்றி நானின்றி
நாடியினும் வேறு தானின்றி வாழ்கின்ற தொருநாளோ "(93)

என்ற வரிகளில் இனிது காட்டப் பெற்றுள்ளது. இதனைக் கந்தர் அநுபூதியினும் அலங்காரத்தினும் விளக்குகின்ற பாடல்கள் பல உண்டு. சைவசித்தாந்தச் செம்பொருட்டுணிவாக விளங்குகின்ற இன்னோரன்ன இடங்கள் திருப்புகழுட் பலவாம்.

**நான்கு பகுதிகள் :**

திருச்செந்தில் பற்றிய திருப்புகழ்ப் பாடல்களில், ஏனைய பாடல்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். (1) பொது மகளிர் பால் அன்பு நீங்கிட வேண்டும் என்று கூறுவன. (29, 36, 46, 60, 61, 73, 81, 83, 86, 88, 89, 90, 91, ஆகியன).

(2) திருவடிப் பேறு வேண்டிப் பாடுவன. (18, 20, 22, 23, 26, 30, 31, 38. 42, 49, 50, 53, 58, 63, 65, 67, 69, 77, 78, 95, 96, 98. 99 ஆகியன),

(3) அகப்பொருள் அமைதி உடையன. (19, 45 ஆகியன),

(4) தமிழ்பாடிப் புகழ விருப்பம் கூறுவன. (25, 32, 33, 34, 48, 57 ஆகியன).

" நோய்கலந்த வாழ்வுருமல் நீகலந்துளாகு ஞான
நூலடங்க வோத வாழ்வு தருவாயே " (76)

என்று வேண்டுவதும்,

" காசறு வாரிமெய் ஞானதவம்சற் றருளாதோ " (75)
என்று விண்ணப்பம் செய்வதும் உண்டு.

**அகந்தை தவிர்க :**

தமிழ்ப் புலவர்கள் தருக்குத் தவிர்ந்திட வேண்டும் என்று கனிந்து கவியிசைக்கும் பகுதியும் செந்தூர்த் திருப்புகழில் உள்ளது.

" படர்புவியின் மீதுமிறி வஞ்சர்கள்
வியனினுரை பானுவாய்வி யந்துரை
பழுதில்பெரு சீலநூல்க ளுந்தெரி சங்கபாடல்
பனுவல்கதை காவ்யமாமெ ணொன்கலே
திருவளுவதேவர் வாய்மை யென்கிற
பழமொழியை யோதியே யுணர்ந்துபல் சந்தமாலை

மடல்பரணி கோவையார் கலம்பக
முதலுள‌து கோடி கோள்ப்ர பந்தமும்
வகைவகையி லாசு சேர் பெருங்கவி சண்டவாயு

மதுரகவி ராஜ னுனென் வெண்குடை
விருதுகொடி தாள மேள தண்டிகை
வரிசை யொ டுலாவு மாலகந்தை தவிர்ந்திடாதோ" (80)

என்பது அப்பாடற் பகுதியாகும். இதனுள் அவர்கால உலகில், புலவராவோர் செருக்குமிக்குத் திரிந்த நிலையையே அடிகள் இவ்வாறு சிறு குறும்பு காட்டிச் செய்யுளாக விரித்தனர் என்று கூறலாம்.

## வருணனை மாண்பு:

திருவடிகளைப் பெறவேண்டும் என்கின்ற ஆர்வந்தான் எத்துணை வகையாக வெளிப்படுகின்றது! ஒரே போக்கிற் பாடாமல் எண்ணற்ற வேலைப்பாடுகளுடன் கூடிய சந்தக் குறிப்புக்கள் மேலே மேலே வந்து மோதுகின்றன.

முதுமைப் பருவத்தின் இயல்பினை எவ்வளவு அழகாக அருணகிரிநாதர் கூறியிருக்கின்றார்.

"தொந்தி சரிய, மயிரே வெளிர, நிரை
தந்தம் அசைய, முதுகே வளைய, இதழ்
தொங்க ஒருகை தடிமேல்வர, மகளிர் நகையாடி

தொண்டு கிழவன் இவன் ஆர்என, இருமல்
கிண்கிணென முனுரையே குழற, விழி
துஞ்சு குருடுபடவே செவிடுபடு செவியாகி,

வந்த பிணியும் அதிலே மிடையும் ஒரு
பண்டிதனு மெயுறுவே தனையும் இள
மைந்தர் உடைமை கடனேதென முடுக துயர்மேவி"
(74)

என்பது அடிகளுடைய இயல்பான அவ்வருணனையாகும். உடலைத் 'தோலொடு மூடிய கூரை' (75) என்று சுருக்கமாகக் குறித்தலும் உண்டு.

## செந்தில் வளம்:

திருச்செந்தூராகிய சீரலைவாயைப் பலவாருகப் புகழ்கின்ற தொடர்களும் காணப்படுகின்றன. திரண்டு மணியும் முத்தும்

தென்னை மரங்களில் தங்கிப்புரளும்படி வீசுகின்ற அலைகளையும், மகர மீன்களையும், சங்கங்களையும் உடைய செந்தூர் (17) என்கின்றார் :

" திரளுமணி தரளமுயர் தெங்கிற் றங்கிப்
புரளஎறி திரைமகர சங்கத் துங்கத்
திமிரசல நிதி தழுவு செந்தில் "

என்பன அவ்வரிகள்.

அழகியபொழில்கள் சூழ்ந்தது (20) என்றும், பவளம்போற் சிவந்த தூய மதில் சூழும் சிறப்புடையது (21) என்றும் வாழும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும் இடைவிடாது நெருங்கிய மங்கல மகிமை மாநகர் (22, 23) என்றும், சூரியனுடைய வலிய தேரிற் பூட்டியுள்ள வலிய குதிரைக்குக் கால் இடறும்படி உயர்ந்துள்ள மதில்களை உடையது (25) என்றும், சிறந்த தாமரை ஓடையிலும் மேடையிலும் நிறைசூல் சங்குகள் முத்துக்களை வீசுகின்ற நகர் (26) என்றும், செழிக்கும் செந் நெற் பயிர்களும், மேகம் அளாவிய கரும்புச் சோலையும், வாழையும் திகழ்வது (27) என்றும், பாடுகின்றனர்.

கறுக்கும் கொண்டலிற் பொங்கும் கடற்சங்கம் கொழிக்கும். (31) சாலிசேர் சங்கினம் வாவிசூழ் பங்கயம். (35) தென்றல் வீசும் பொழில் (38) மன்றல் கமழ் பூகம், தெங்கு திரள் சோலை வண்டுபடு வாவி புடைசூழ மந்தி நடமாடும். (62) தெருவிலேயும் முத்துக்களை அலையெறியும். (63) சேல், வாளை, வரால் மீன்கள், துள்ளிப் பாய்ந்து கமுகமரத்தில் கலக்கும். (75) வெண்மணலின் மீது வண்டல் ஓடிய வாய்க்காலின் வழியாக நிறைசூல் கொண்ட சங்குகள் முத்து மணிகளைப் பெறும். (84) சந்தன மரம், மந்தாரம், கரும்பு, வாழை செழித்து இருக்கும். (96) செண்பக வனங்கள் நிறைந்து இருக்கும். (99).

இவை ஏனைய பாட்டுக்களில் வரும் திருச்செந்தூர் பற்றிய இயற்கை வருணனைகள். இவற்றைப் பார்க்குங்கால், திருச் செந்தூர்க் கடற்கரை, சோலைகளில் அருணகிரியார் மனம் எத்துணை ஈடுபாடு கொண்டிருந்த தென்பது இனிது விளங்கும். தற்குறிப்பேற்றம், இயற்கை இறத்தல் அமையவும் இவரது இயற்கை வருணனைப் பகுதிகள் இனிக்கும் இயல்பின என்பதற்கு இவற்றைச் சான்று காட்டலாம்.

**அகப் பொருள் அமைதி:**

அகப்பொருள் அமைப்புடைய இரு பாடல்களும் நற்றும் இரங்கும் துறைப்பொருளமைதி உடையவை:

" எம்பொற் கொடிமற் றுன்பக் கனைற்
றின்பக் கலவித் துயராளுள் " (19)

" குறவாணர் குன்றில் உறைபேதை கொண்ட
கொடிதான துன்ப மயல்தீர
குளிர்மாலை யின்கணணிமாலை தந்து
குறைதீர வந்து குறுகாயோ " (45)

ஆகிய அப்பாடற் பகுதிகளிலும், அவற்றுக்கு முற்பகுதிகளிலும் காதல்கொண்ட பெண்ணொருத்தியின் துன்பநிலை சுவைபெற வருணிக்கப்பட்டுள்ளமை காணலாம்.

**முடிவு:**

இதுகாறும் கூறியவற்றால், திருச்செந்தூர்த் திருப்புகழ்ப் பாக்களின் அமைப்புமுறை, இயற்கை வருணனை, தத்துவ நலம், பொருட்சிறப்பு முதலியன இனிது விளங்கலாகும். இவற்றைப் பொருள் உணர்ந்து ஓதினால், நக்கீரர் நவில்வது போன்று மா முருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித் தானினைத்த வெல்லாம் தருவான் என்பது உறுதி.

---

## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B. L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

# இந்திரன்

வேதாந்தசிரோமணி

**பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்**

கிழக்கு முதலிய எட்டுத் திசைகளுக்கும் இந்திரன் அக்நி யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்கள் முறையே அதிபதிகள் ஆவார்கள். இவர்களை லோகபாலர் என்றும் திக்பாலர் என்றும் கூறுவது வழக்கம். இவர்களுள் கிழக்குத் திசுகிற்கு அதிபதி இந்திரன்; சுவர்க்கலோகத்தில் அமராவதி என்னும் பட்டணத்தில் ஸுதர்மா என்று புகழ்பெற்ற தேவ சபையில் இருந்துகொண்டு பிரஹஸ்பதியைக்குருவாகக்கொண்டு தேவர்களை ஆண்டுவரும் தேவராசன். நூறு அசுவமேத யாகம் செய்தவராலேயே இந்திர பதவி பெறப்படும். ஆதலின் இந்திரனை சதமகன், சதக்ரது, சதமன்யு என்றும கூறுவர்.

வேதங்கள் அபௌருஷேயம் என்பது வைதிகர் கொள்கை யாயினும் மேல்நாட்டார் பாரதநாட்டிற்கு ஆதியில் வந்த ஆர்யர்களால் பாடப்பட்ட தெய்வத்துதிகளாகும் என்றுதான் கருதுகினறனர். அவ்வேதங்களிலும் ரிக்வேதம் முதன்முதலாக சிந்துநதிதீரத்தில் பாடப்பட்டது. (ரிக் - நான்கு அடிகளைக் கொண்டு செய்யுள் வடிவில் அமைந்த வேதத்திலுள்ள பாடல்கள். இவ்வித ரிக்குகள் மிகுந்து இருப்பதால் ரிக்வேதம் எனப்படும்.) பிறகு கங்கா யமுனா நதிதீரங்களுக்கு ஆர்யர் வந்தபிறகு அவர்களால் இயற்றப்பட்டன யசுர்வேதம். (யசுர் - உரை நடை வடிவில் சிறியனவாக அமைந்த வாக்யங்கள். இவ்விதம் வாக்கியம் மிகுந்திருப்பதால் யசுர்வேதம் எனப்படும்) கானம் சாமவேதம் எனப்படும். சாமவேதத்தில் கானத்திற்கு ஆதாரமாக உள்ள பாடல்கள் (ரிக்குகள்) பெரும்பாலும் ரிக்வேதத்திலிருந்தே எடுக்கப்பட்டுள்ளன. ரிக்வேதத்தில் இல்லாத ரிக்குகள் சாமவேதத்தில் சுமார் 72 தான் இருக்கும். இம்மூன்று வேதங்களே வேள்விகள் இயற்றுவதற்கு வேண்டிய மந்திரம், சஸ்திரம், ஸ்தோத்ரம், ஸ்தோத்ரியம் முதலியனவற்றைத் தம்முள் அடக்கி இருப்பதால் அவற்றை

"த்ரயீ" என்று ஆர்யர் அழைத்தனர். அதர்வ வேதத்தில் இவ்வுலகில் பயனளிக்கவல்ல பல கர்மங்களே மிகுந்து இருப்பதால், பரலோக சுகத்தில் விருப்பம்கொண்ட முன்னோர் அதர்வவேதத்தைத் தனியே விட்டுவிட்டனர்.

வேதங்களில் சொல்லப்படும் கர்மாக்களில் இந்திரனுக்கு ஹவிர்பாகம் இல்லாத வேள்வியே இல்லை எனலாம். எவ்விடத்தும், எல்லோராலும் அடிக்கடி ஹவிர்பாகம் பெறுவதற்கு இந்திரன் அழைக்கப்படுவதால் புருஹூதன் என்ற பெயரும் உண்டு.

ரிக்வேதம் ஐதரேய பிராமணத்தில் 38 ஆவது அத்தியாயம் முழுவதும் இந்திரனுடைய பெருமையையும், அவன் ஸோமபானம் செய்வதையும் குறிக்கும். கிருஷ்ணயசுர்வேதம் இரண்டாம் காண்டம் பிரபாடகம் இரண்டிலும் இந்திரனைப்பற்றியுள்ளது. ஸாம வேதத்தில் பூர்வார்ச்சிகத்தில் சுமார் 300 ரிக்குகள் வரை இந்திர ஸ்துதியாக உள்ளன. அதர்வ வேதத்திலும் இருபதாம் காண்டம் 589 முதல் 731 வரையிலுள்ள ரிக்குகள் இந்திரனைப் பற்றியன.

விருத்ராசுரனை இந்திரன் கொன்றான். அதனால் தனக்கு உண்டான பாபத்தைப் பலரிடம் பங்கிட்டுக் கொடுத்து, அந்தப் பாபத்தை ஏற்றுக்கொண்டதற்காக வரமும் கொடுத்தான் என்ற வரலாறு வேதத்தில் காணப்படினும் மழைக்கு இடையூறாக உள்ளதை விருத்திரன் என்றும், அதை நீக்கி மழை பொழியச் செய்து மக்களைக் காத்ததையே இவ்வாறு ரூபகம் செய்து வேதத்தில் கூறப்படுகிறது என்றும் மேல்நாட்டார் நினைக்கின்றனர். மேகங்களைக் கொண்டு மழை பொழியச்செய்து உலகத்தைக் காப்பவனாதலின் மேகவாஹனன் என்ற பெயரும் உண்டு.

அரசனைப்போல் ஆணையிடும் வேதத்தைவிட்டு, நண்பனைப் போல பலப்பல கதைகளைச் சொல்லி இது செய்யத்தக்கது, இது செய்யத் தகாதது என்பதை விளக்கி உணர்த்தும் புராண இதிஹாஸங்களிலோ இந்திரனுக்கு ஏராளமான இடம் உண்டு. சம்பரன், பலன், நமுசி, அஹி, ஜம்பன், விருத்திரன் முதலான பல அசுரர்களை வதம்செய்து தேவர்களையும், தேவலோகத்தையும் காத்தவன் என்று கூறப்படுவதால், பலாராதி, நமுசி ஸூதனன், ஜம்பபேதீ, விருத்ரஹா முதலிய பல பெயர்களால் கூறப்படுகிறான். எந்தப் பதத்தினால் உணர்த்தப்பட்டாலும் இந்திரன் ஒருவனே என்பது இலக்கிய வழக்கு. வேதங்களுக்குப் பொருளுரைக்கும் மீமாம்ஸா சாஸ்திரமோ வெவ்வேறு தேவர் என்றும்.

ஆதலால் அக்நயே ஸ்வாஹா என்று ஹோமம் செய்யவேண்டிய இடத்தில் தீக்கடவுளுக்கு மற்றொரு பெயராகிய பாவக என்ற சொல்லைச் சேர்த்து "பாவகாய ஸ்வாஹா" என்று ஹோமம் செய்யக்கூடாது என்றும் தீர்மானித்துள்ளது.

தேவர்களுக்குக் கை கால் முதலிய அவயவங்கள் கொண்ட சரீரம் கிடையாது. சொல்லால் உச்சரிக்கப்படுவதே அவர்களுக்கு தேஹம். வஜ்ரஹஸ்த: இம்மாதிரி வேதத்தில் காணப்படினும் (வஜ்ராயுதத்தைக் கையில் உடையவன்) அவையெல்லாம் அர்த்தவாதம் என்று தீர்மானித்துள்ளனர் மீமாம்ஸகர். ஆனால் தியான பூசா நிமித்தமாக நிஷ்கள வஸ்துவையும் ஸகளமாகப் பாவிப்பது வழக்கம். அதற்கு ஏற்றவாறு காசியப சில்ப சாஸ்திரம் 43 ஆவது படலத்தில்

एकवक्त्रो द्विहस्तश्च जातिलिङ्गसमप्रभः।
करण्डमकुटोपेतः सर्वाभरणभूषितः॥
शक्तिं (वज्रं) च दक्षिणे हस्ते वामहस्तेऽङ्कुशं वहन्।
विस्तृतोरा दीर्घकण्ठो वामे शचिसमन्वितः॥
द्विनेत्रः सौम्यवदनः सिंहासनपरिस्थितः।
आसीनो वा प्रकर्तव्यो गजारूढोऽप्यथापि वा॥

ஒருமுகம், இரண்டு கண், இரண்டு கை, ஜாதிலிங்கத்தை ஒத்த காந்தி, கரண்ட மகுடம், ஸகலவித ஆபரணம், அகன்ற மார்பு, நீண்ட கழுத்து, இடதுபக்கம் இந்திராணி, வலதுகையில் வஜ்ராயுதம், இடது கையில் அங்குசம், இனியமுகம் இவற்றையுடையவனாய் சிம்மாசனத்தில் இருப்பதாகவோ, யானைமேல் ஏறியவனாகவோ இந்திரனைச் செய்யவேண்டும் என்று கூறுகிறது. சிவாலய உத்ஸவ காலத்தில் திக்பந்தம் செய்யும்பொழுது இந்த்ர: ச்யாமதனு: (கறுத்த உடலுடையவன்) என்று கூறுகின்றனர்.

P. Thomas என்பவரால் எழுதப்பட்ட Epics Myths & Legends of India என்ற நூலில், சிம்மாஸனத்தில் இருக்கும் நிலையிலும் யானை சவாரி செய்யும் நிலையிலும் இரண்டு சித்திரங்கள் காட்டப்பட்டுள்ளன. ஐராவதத்தில் சவாரி செய்யும் நிலை ஸோமநாத்பூரில் உள்ளது என்றும் சிம்மாஸனத்தில் வீற்றிருப்பதாக உள்ள படம் W. O. Simpson என்பவரால் பதிப்பிக்கப்பட்ட Moor E. Hindu Pantheon என்ற பத்திரிகையிலிருந்தும் அவர்களின் அனுமதி பெற்றுப் பிரசுரிக்கப்பட்டதாக உள்ளது.

இங்கு இந்திரன் மனைவி இந்திராணியின் படமும் உள்ளது. இந்திராணி சசீ என்றும், புலோமனுடைய பெண் ஆதலால் புலோமஜா என்றும் பெயர்பெறுவாள். இந்திரனுடைய பிள்ளை ஜயந்தன். பெண் ஜயந்தி. ஸாரதி மாதலி, என்று சொல்லப் படுவர். அவனுடைய மாளிகை வைஜயந்தம், உத்யானம் நந்தனம், என்றும் சொல்லப்படும். அமிர்தமதனம் செய்த பொழுது உண்டான சிறந்த பொருள்களுள் கல்பவிருக்ஷம், காமதேனு, உச்சைசிரஸ் என்னும் குதிரை, ஐராவதம் என்ற நான்கு தந்தமுடைய வெள்ளையானை, அமிர்தம் இவையெல்லாம் இந்திரனிடத்தில் இருப்பதாலேயே அவன் இந்திரன் (செல்வ முடையவன்) இதை நீலகண்ட தீக்ஷிதர் என்ற கவி "வேதம் ஓதி உலர்ந்த முகமுடைய அந்தணரே பிர்மலோகத்திலும், உலர்ந்ததும் உலராததுமான துளசியே விஷ்ணுலோகத்திலும், பூதம், பேய், பிசாசு முதலியனவே சிவலோகத்திலும் மிகுந்து காணப்படும்; ஆனால் ரத்னம், அப்ஸரஸ் அமிர்தம் முதலியன இந்திர லோகத்திலேயே உள்ளன என்று வேடிக்கையாகக் கூறினர்.

இந்திர சபையான சுதர்மாவின் வர்ணனை மகாபாரதம் சபாபர்வம் அத்தியாயம் 16ல் உள்ளது. தேவசபையின் படம் ஒன்று Peray Brown என்பவரால் பிரசுரிக்கப்பட்ட Indian Architecture என்ற நூலில் எல்லோரா குகைக் கோயிலிலிருந்து எடுத்து பிரசுரிக்கப்பட்டுள்ளது.

( தொடரும் )

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam

I had the great pleasure of visiting this temple this fore-noon and it is one of our finest places of art and civilisation. The temple is kept well.

(Sd.) K. Kanthimathi
Director
State Institutes of Education
Madras.

4-10-69

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் திருச்செந்தூர் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆண்டுதோறும் கந்தசஷ்டி விழாவிற்குத் திருச்செந்தூர் எழுந்தருளி கந்த விரதம் மேற்கொண்டு செந்திலாண்டவனை வழிபட்டு வருதல்போல இவ்யாண்டிலும் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். கந்தசஷ்டி விழா நாட்களில் நாடோறும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி செந்திற்குமரனை அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் செய்வித்துத் தரிசித்து இன்புற்றார்கள்

## தருமையில் சதசண்டி யக்ஞ விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீ அஷ்டாதச புஜ மகாலக்ஷ்மி திருக்கோயிலில் 9ஆவது சதசண்டி யக்ஞவிழா 12—10—69 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. 10—10—69 வெள்ளிக்கிழமை கணபதி ஹோமமும். 11—10—69 சனிக்கிழமை அனுக்ஞை, அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம் முதலியனவும். 12—10—69 ஞாயிற்றுக்கிழமை கடஸ்தாபனம், சண்டியக்ஞ பூஜாரம்பம் முதலியனவும் நடைபெற்றன பின்னர் நாள்தோறும் காலை மாலை இரு வேளைகளிலும் சதசண்டி யக்ஞம் நிகழ்ந்தது. 16—10—69 வியாழக்கிழமை மாலையில் விலவ விருக்ஷாபிமந்த்ரணமும் 17—10—69 வெள்ளிக்கிழமை காலை நவபத்ரிகாக்ரஹணமும் 18—10—69 சனிக்கிழமை அஷ்டாதச ஆயுதபூஜையும், 19—10—69 ஞாயிற்றுக்கிழமை சப்தசதிஹோமமும், வசோர்த்தாரை, மகாபூர்ணாகுதி தீபாராதனை (சதசண்டியக்ஞ பூர்த்தி) முதலியனவும் அன்று மாலை யக்ஞாங்க பூர்ணாகுதி தீபாராதனையும். இரவு யோகினி மண்டலம், பைரவ மண்டலம், கௌரீ மண்டலம், வாஸ்து மண்டலம், சர்வதோபத்ர மண்டலம் பூஜை பலிதீபம் முதலியனவும் நடைபெற்றன.

**20—10—69 காலை யாகசாலையிலிருந்து கடம் எழுந்தருளியாகி வலம்வந்து ஸ்ரீ துர்க்காதேவிக்கு அபிஷேகமும், சப்தசதீ**

யக்ஞ கலசாபிஷேகமும், சதசண்டியக்ஞ பூர்த்தி முதலியனவும், ஏழுகோடியே பதினைந்தாவது லக்ஷ அருச்சனைப் பூர்த்தியும் பதினாறுவது லக்ஷ அருச்சனைத் தொடக்கமும் நிகழ்ந்தன.

ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி சந்நிதியில் சுவாசினி குமாரி வடுபூஜை, சதுர்வேத பாராயணம், துர்க்காசூக்த பாராயணம், திருமுறைப் பாராயணம் அபிராமி அந்தாதி பாராயணமும், கொலு அலங்காரங்களும், ஸ்ரீ துர்க்காதேவிக்கு லக்ஷார்ச்சனை அபிஷேக அலங்காரங்களும், ஸ்ரீ வித்யாசக்ரமாகிய மேருவிற்கு சகஸ்ர நாமார்ச்சனையும் சிறப்பாக நடைபெற்றன. நாள்தோறும் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்கு பிரசாதம் முதலியன வழங்கியருளினார்கள். மாயூரத்திலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் அன்பர்கள் பலர் வந்து ஸ்ரீ துர்க்காம்பிகையைத் தரிசித்து மகிழ்ந்தனர்.

## கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

திருத்தருமையாதீனத்தில் நடைபெறுகின்ற கல்வி நிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவாரப் பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி, பல்கலைக் கல்லூரி ஆகியவற்றில் கலைமகள் விழா 12—10—69 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 20—10—69 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. கலைமகள் விழாவை முன்னிட்டு கந்தபுராண விரிவியற் சொற்பொழிவுகள் நாள்தோறும் மாலை 3 மணி அளவில் தருமையாதீனம் திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் தொடங்கி நடைபெற்றன. தருமையாதீனக் கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள் மன்னனபந்தல் அ. வ. அ கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்கள் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளித் தமிழாசிரியர், ஆதீன ஓதுவாமூர்த்திகள், ஆதீனப் பல்கலைக் கல்லூரி நான்காமாண்டு மாணவர்கள் ஆகியோர் கந்தபுராண விரிவியற் சொற்பொழிவை நிகழ்த்தினர். நாள்தோறும் சொற்பொழிவு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் கல்விநிலைய மாணவ மாணவியரால் கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப் பட்டன. கல்வி நிலைய மாணவ மாணவியரும் மற்றும் பலரும் சொற்பொழிவுகளைக் கேட்டும் கலைநிகழ்ச்சிகளைக் கண்டும் மகிழ்ந்தனர்.

## ஆதீன தேவஸ்தானங்களில் நவராத்திரி விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களில் நவராத்திரி விழாவைக் குறித்து 12—10—69 ஞாயிற்றுக்கிழமை முதல் 20—10—69 திங்கட்கிழமை முடிய உள்ள நாட்களில் ஸ்ரீ அப்பாளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார அர்ச்சனை ஆராதனைகளும், சிறப்பாக நடைபெற்றன. நவராத்திரி விழாவை முன்னிட்டு ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் அபபிகையின் அருள் நூல்கள், நவராத்திரிச் சிறப்பு முதலிய தலைப்புக்களில் அறிஞர்கள் பலரின் சொற்பொழிவுகளும், இன்னிசை நிகழ்ச்சியும நடைபெற்றன.

## கந்தசஷ்டி விழா

**வேளூரில் :**

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானத்தில் கந்தசஷ்டிவிழா 10—11—69 திங்கட்கிழமை முதல் தொடங்கி நடைபெற்றது. நாள்தோறும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமி எழுந்தருளி அருள்வழங்கிய காட்சியை அன்பர்கள் கண்டு களித்தனர். 15—11—69 சனிக்கிழமை காலை சூரசம்ஹார நிகழ்ச்சி சிறப்புற நிகழ்ந்தது. சஷ்டிவிழா நாட்களில் உண்ணா நோன்பு இருந்து முருகனை வழிபட்டுவரும் அன்பர்களும் மற்றும் பலரும் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானைத் தரிசித்து இன்புற்றனர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளால் கந்தபுராண விரிவியற் சொற்பொழிவு பிரசங்க சபாமண்டபத்தில் நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றது. தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், தருமையாதீனப் புலவர் மகாவித்துவான் முதுபெரும்புலவர், சித்தாந்தக்கலைமணி திரு சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் கந்தபுராண விரிவியற் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். கந்தபுராணத்தின் ஆறு காண்டங்களும் ஆறு நாட்களுக்கும் தலைப்பாக அமைந்திருந்தது. சஷ்டி விரதம் மேற்கொண்ட அன்பர்கள் முருகப்பெருமான் அருள் வரலாற்றை முறையாகக் கேட்கும வாய்ப்பை இவ்விரிவியற் சொற்பொழிவின் மூலம் பெற்றனர்.

**மாயூரம் - குமரக்கட்டளையில் :**

தருமையாதீனம் மாயூரம் - குமரக்கட்டளை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் 10—11—69 திங்கட்கிழமை முதல் கந்தசஷ்டி விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது 15—11—69 சனிக்கிழமையன்று சூரசம்காரம் சிறப்பாக நடைபெற்றது. கந்தசஷ்டி விழா நாட்களில் காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் திருவீதிக்கு எழுந்தருளி அருட்காட்சி வழங்கினார். இவ்விழா நாட்களில் கந்தபுராண விரிவியற் சொற்பொழிவு நிகழ்ந்தது ஒவ்வொரு காண்டமும் சொற்பொழிவுத் தலைப்புக்களாக அமைந்தன.

11—10—69 அன்று தருமையாதீனப் பல்கலைக் கல்லூரிப் பேராசிரியர், திரு சி அருணைவடிவேல் முதலியார் அவர்களும், 12—10—69 அன்று பொறுப்பு முதல்வர், திரு வி சா குருசாமி தேசிகர் அவர்களும், 13—10—69 அன்று திரு. வி சபேசன் அவர்களும், 14—10—69 அன்று மன்னன்பந்தல் அ. வ அ. கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திரு. செ. சிங்காரவேலனார் அவர்களும், 15—10—69 அன்று பல்கலைக்கல்லூரிப்பேராசிரியை திருமதி ப. நீலா அவர்களும் சொற்பொழிவாற்றினர். அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய
சமயப் பிரசார நிலையத்தில்

## செப்டம்பர்மாத வழிபாடு

சமயப் பிரசார நிலையத்தின் 126 ஆவது மாத வழிபாடும், சமயப் பிரசாரமும் மீனம்பாக்கத்திற்கு அருகில் உள்ள நங்கைநல்லூர் ஸ்ரீ வரசித்தி விநாயகர் ஆலயத்திலும், ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் ஆலயத்திலும் 28—9—69 ஞாயிறு மாலை மிகச் சிறப்பாக நடைபெற்றன ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலய மண்டலாபிஷேக வழிபாட்டை நிலைய வழிபாட்டுக் குழுவினர் தமது உபயமாக ஏற்று விசேஷ அபிஷேக ஆராதனைகளை நிகழ்த்திவைத்தனர். ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் ஆலயத்திலும் அபிஷேக ஆராதனைகளைச் சிறப்புறச் செய்துவைத்தனர்.

குழுவினர் விநாயகர் அகவல், சிவபுராணம் இவற்றை ஓதிக் கூட்டு வழிபாடு நிகழ்த்தினர் வழிபாட்டின்பின்னர், தவத்திரு. சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் தலைமையில் சமயப்பிரசாரக்

கூட்டம் நடந்தது. திருக்கோயில் ஆசிரியர் திரு. என். ஆர். முருகவேள் விநாயகர் பெருமை பற்றியும், ஊரின் சிறப்புப் பற்றியும் பேசினர்கள் திரு. இரா. செல்வக்கணபதி விநாயகரின் பொதுமை பற்றிப் பேசினர். வித்துவான் திருமதி. மீனட்சி சுந்தர சிவை ஐந்தெழுத்தின் சிறப்புப் பற்றிப் பேசினர்கள்.

தவத்திரு. சுவாமிகள் தமது தலைமையுரையில் நல்லவர்கள் வாழுமிடம் செழிப்பாக இருக்கும் என்றும், நல்லவர்கள் பெருகப் பெருக நாடு செழிக்கும் என்றும், எல்லோரும் நல்லவர்களாக வேண்டுமானல் என்றும் நல்லவனுக உள்ள இறைவனை வழிபட வேண்டும். அவனுக்குக் கோயில் கட்டவேண்டும். சிதைந்த கோயில்களைத் திருப்பணி செய்து செப்பம் செய்யவேண்டும் என்றும், இவ்வூர் மக்கள் மிக்க சிரத்தையுடன் கோயிலைக் கட்டிப் பராமரித்து வருவது பாராட்டத்தகக செயல் என்றும், நங்கைநல்லூர் என்ற பெயருக்கு ஏற்ப மக்களும் நல்லவர்களாக இருப்பது போற்றத்தக்கதென்றும் குறிப்பிட்டார்கள்.

கணேச மண்டலியினர் வழிபாட்டுக் குழுவினரை வரவேற்று வழிபாட்டையும் சமயப் பிரசாரத்தையும் சிறப்பாக நடத்திவைத்தனர். ஊர்மக்கள் பெருந்திரளாக வந்திருந்து உற்சாகமாக வழிபாட்டிலும், சமயப் பிரசாரத்திலும் கலந்துகொண்டார்கள். ஸ்ரீ அர்த்தநாரீசுவரர் ஆலயத்திலும் குழுவினர்சென்று தேவாரத் திருமுறைகளை ஓதி வழிபட்டனர். சுவாமிகள் குளக்கரையிலிருக்கும் அவ்வாலயத்தின் எளிமைச் சிறப்பைப் பாராட்டி வருங்காலத்தில் வளமிக்க கோயிலாக்க வேண்டியது மக்களின் கடமை என்பதை வலியுறுத்தினர்கள்.

உருத்திரபசுபதி நாயனர் குருபூசையன்று குளக்கரையில் உள்ள அர்த்தநாரீசுவரரை வழிபடும் பேறு கிடைத்துள்ளது பக்தர்கட்குரிய பேருகும் என்றர்கள். நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் சங்கீத பூஷணம் திரு. எஸ். ஞானப்பிரகாசம் தேவாரத் திருமுறை ஓதி மகிழ்வித்தார்.

## விநாயகசதுர்த்தி விழா

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 15—9 69 மாலை 7-30 மணிக்கு விநாயகசதுர்த்தி விழா சென்னை வானெலி நிலையக் கர்நாடக சங்கீத இசையமைப்பாளர் திரு. கே. சி. தியாகராசன் அவர்கள் தலைமையில் கொண்டாடப்பெற்றது. விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்

தக்கது என்றும், விநாயகர் பேதம் 16 என்றும் 32 என்றும் பேசப்பட்டுள்ளது என்றும் தலைவர் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்கள். வித்துவான் திரு. பி. வடிவேல் பிள்ளை அவர்கள் "விநாயகர் வரலாறு" என்பதுபற்றிப் பேசும்போது கஜமுக அசுரனை ஒடுக்குதற்காக எழுந்த கோலமே விநாயகர் திருவுருவம் என்றும், அசுரத்தன்மையை அடக்குதற்காக அடியவர்களின் பொருட்டு ஆண்டவன் எடுக்கும் திருமேனிகள் அளவில்லாதன என்றும், அன்பர்கட்கு நன்மை செய்ய வந்த விநாயகர் திருமேனியை வழிபடுவது நாட்டிற்கும் நமக்கும் நன்மேயே என்றும் குறிப்பிட்டார்கள். நிலையத் திருமுறை வகுப்பு மாணவியர் கடவுள் வணக்கமும், வாழ்த்தும் பாடினர்.

## வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

வைத்தீஸ்வரன்கோயிலில் 30—9—69 கிருத்திகையன்று ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு மிகச் சிறப்பாக நடைபெற்ற சந்தனக் குழம்பு அபிஷேகப் பிரசாதமும், ஸ்ரீ தையல்நாயகியம்மைக்கும், ஸ்ரீ வைத்தியநாதருக்கும் நடைபெற்ற சகஸ்ரநாம அர்ச்சனைப் பிரசாதமும 1—10—69 மாலை 7 மணிக்குச் சென்னை சமயப் பிரசார நிலைய மன்றத்தில் டாக்டர் உ. வே சாமிநாத ஐயர் அவர்களின் பெயரர் திரு. க. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத் தமிழ்ப் பாராயணம் நிகழ்த்தி அன்பர்கட்கும், உறுப்பினர்கட்கும் வழங்கப்பட்டன

ஐயரவர்கள் தமது தலைமையுரையில் வைத்தியநாதர் நமது உடல் பிணியையும், உயிர்ப் பிணியையும் போக்கி வாழ்வளிப்பதால் பெரும் பிரார்த்தனைத் தலங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது வைத்தீஸ்வரன்கோயில்; தருமையாதீனத்தைச் சேர்ந்த இருபத்தேழு கோயில்களும் இருபத்தேழு நக்ஷத்திரங்களாக விளங்குகின்றன. அவற்றுள் வைத்தீஸ்வரன்கோயில் கிருத்திகை நட்சத்திரமாக விளங்குகிறது ஆதீனக்கோயில்கள் அனைத்தும் மிகவும் தூய்மையாகவும், வேதாகம முறைப்படி பூசை நடப்பதாகவும் உள்ளது பாராட்டத்தக்கதாயுள்ளது. சமீபத்தில் நிலையவழிபாட்டு யாத்திரையில் சென்றபோது ஆதீனக் கோயில்களின் தூய்மையையும், சிவாசாரியர்கள் சிப்பந்திகள் நடந்துகொள்ளும் முறைமையையும் நேரில் பார்க்கும்போதே வழிபடுவோர்க்குப் பக்தி ஏற்படக்கூடிய சூழ்நிலை உண்டாவதைப் பார்த்து மகிழ்ந்தேன் என்று குறிப்பிட்டார்கள் நிலையத் திருமுறை வகுப்பு ஆசிரியர் சங்கீதபூஷணம், திரு. எஸ். ஞானப்பிரகாசம் பிரார்த்தனை நிகழ்த்தினர்

# நவராத்திரி விழா

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 11—10—69 சனிக்கிழமை முதல் 19—10—69 ஞாயிற்றுக்கிழமை முடிய நவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. முதல்நாள் விழாவை, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி கனம். திரு. ஆர். சதாசிவம் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். திரு. கி. வா. ஜகந்நாதன், திரு கே. கமலக்கண்ணன், நீதிபதி கனம். திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார், திருமதி. டி. என். அனந்தநாயகி, தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள், டாக்டர் திரு. எம். நடராஜன், திரு. கே. சி. தியாகராஜன், திருமதி, குகப்பிரியை ஆகியோர் முறையே ஒவ்வொரு நாள் தலைமை வகித்து அறவுரை பகர்ந்தார்கள். ஸ்ரீ பால சுப்பிரமணியராமன் B. A., B. L., அவர்கள் "ஆதிசக்தியும் ஆசார்ய பக்தியும், அம்பிகையும் ஐயர்வாளும், பக்த மார்க்கண்டேயர், அம்பிகையும் அப்பைய தீக்ஷிதரும், ருக்மணி கல்யாணம், சீதா கல்யாணம், வள்ளிகல்யாணம் மீனாக்ஷிகல்யாணம்" ஆகிய தலைப்புக்களில் ஒவ்வொருநாளும் விரிவுரை யாற்றி மகிழ்வித்தார்கள். 19—10—69 ஞாயிறு சரஸ்வதிபூஜை யன்று குமாரி பி. மீனாட்சி, பி. லலிதா குழுவினர் ஊத்துக்காடு வேங்கடகவியின் நவாவரண கீர்த்தனைகளைப் பாடிச் சிறப்பித்தனர். பத்துநாட்களும் ஸ்ரீ மீனாட்சியும்மையின் திருவுருவப் படத்திற்கு லலிதா சகஸ்ரநாமார்ச்சனை நிலைய அன்பர்களான திரு. எஸ். பால சுப்பிரமணிய முதலியார், திரு கே கமலக்கண்ணன், திருமதி. என். தாக்ஷாயணி அம்மாள், திரு. எஸ். சாம்பசிவ ஐயர், திரு எம். சந்திரசேகர முதலியார் J. P., திரு ஜி. டி. சிவசண்முக சுந்தரஞ்செட்டியார், திரு. ஆர். மாசிலாமணி முதலியார் திரு. சிவசங்கரன் செட்டியார், திரு டி. என். உடையநம்பி நாடார், திரு நல்லி குப்புசாமி செட்டியார் ஆகியவர்களின் உபயமாக நடத்தப்பெற்றது. தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகளவர்கள் வரவேற்புரையும் நன்றியுரையும் நவின்றார்கள். திரு. கே. சி. தியாகராசன், திரு. எஸ். ஞானப்பிரகாசம், திரு. ப. வடிவேல் பிள்ளை ஆகியோர் அபிராமி அந்தாதியை இன்னிசையுடன் பாராயணம் நிகழ்த்தினர்.

# திருமுறை வகுப்பின் 16 ஆவது ஆண்டு நிறைவு விழா

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் திருமுறை வகுப்பின் பதினாறுவது ஆண்டு நிறைவு விழா விஜயதசமியன்று 20—10—69 மாலை சிறப்பாகக் கொண்

டாடப்பெற்றது. விழாவிற்கு திரு. மீ. ப. சோமசுந்தரம் (சோமு) அவர்கள் தலைமை வகித்தார்கள். உயர்நீதிமன்ற நீதிபதி கனம். திரு. பி எஸ். சோமசுந்தரம் அவர்கள் திருமுறைவகுப்பு மாணவ மாணவியர்கட்குப் பரிசு வழங்கினார்கள் குமாரி கௌரி சம்யுக்தா குழுவினர் "பார்வதி திருமணம்" பற்றி இன்னிசைக் கதாகாலட்சேபம் நிகழ்த்தினர். தலைவர் தமது தலைமையுரையில் திருமுறைகளின் சிறப்பையும், திருமுறைகளில் அமைந்துள்ள பண்களின் உயர்வையும் விளக்கிப் பாராட்டினார்கள். நீதிபதி அவர்கள் பரிசு வழங்கிப் பேசுகையில் சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு நல்ல பழக்கம் உண்டாகப் பெற்றோர்கள் தேவாரத் திருமுறைகளைக் குழந்தைகட்குக் கற்பிக்கவேண்டும் என்றும். ஆதீனத்தார் இலவசமாக நடத்தும் இவ்வகுப்பில் சிறுவர் சிறுமியர்களை அனுப்பிப் பயன் அடையவேண்டியது மக்கள் கடமை என்றும் குறிப்பிட்டார்கள். தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும், நன்றியுரையும் நவின்றார்கள். திரு. எஸ். ஞானப்பிரகாசம் கடவுள் வணக்கமும். வாழ்த்தும் பாடினர்.

## வேளூர்க் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

சென்னை, தருமையாதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில் 27—10—69 அன்று வைத்தீஸ்வரன்கோயிலின் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின் உபயமாக ஸ்ரீ செல்வமுத்துக்குமார சுவாமிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. டி அருட்பிரசாதம் 28—10—69 மாலை 7 மணிக்கு நிலைய மன்றத்தில் வித்துவான். திரு. ப. வடிவேல் பிள்ளை அவர்கள் தலைமையில் வேளூர்த் தேவாரம், திருப்புகழ், பிள்ளைத்தமிழ் ஓதிப் பிரார்த்தனை நிகழ்த்தி பிரசாதம் பெறும் உறுப்பினர்கட்கும், அன்பர்கட்கும் வழங்கப்பட்டன தலைவர் அவர்கள் அன்பளிப்பாக அனைவருக்கும் இனிப்பு வழங்கி வேளூர்ச் சிறப்பையும், ஆதீனத்தின் ஆட்சிச் சிறப்பையும் பாராட்டி மக்கள் வழிபாட்டில் பங்கு கொள்ளவேண்டியதை வற்புறுத்தினார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் வரவேற்புரையும். நன்றியுரையும் கூறினார்கள். திரு. எஸ். ஞானப்பிரகாசம் பிரார்த்தனை நிகழ்த்தினர்.

## எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( சௌமியளு கார்த்திகைமீ 1வ முதல் 30வ முடிய )

( 16—11—69 முதல் 15—12—69 முடிய )

### 1 மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஜீவன விருத்தியும் தொழில் அபிவிருத்தியும் கொடுத்து வரவு செலவு சமமாக இருக்கும். அடிக்கடி மனம் மாறுதல்களை உண்டுபண்ணும். சிநேகிதர்கள் எல்லோரும் விரோதமாகவே நடப்பார்கள். சகல காரியங்களும் தடங்கலோடுதான் நடந்து கொண்டு இருக்கும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

### 2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். கிரய விக்கிரயங்களில் லாபமும், நஷ்டமான பொருள் வரத்தும் புதிதாகத் தொழில் ஏற்படுதலும் வியாதி சாந்தியும் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பு கிடைக்கும். செவ்வாய் புதன் சுபமாகும்.

### 3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதமும், சுபமான பலனைத்தரும். விவகாதி சுபங்களும், புதிதாக வீடு நிலம் வாங்குதலும். புதிதாக வஸ்திரங்கள் ஆபரணங்கள் வாங்குதலும் ஏற்படும். மேல் பதவி கிடைக்கும். ஆரோக்யம் உண்டாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

### 4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனையேதரும். புதிதாகத் தொழில் ஏற்படும். உத்தியோகம் கிடைக்கும். ஸ்தாவர

ஜங்கம சொத்துக்கள் மூலம் விசேஷமான லாபம் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். உத்தியோக லாபம் கிடைக்கும். மேலோர் பெரியோர்களின் உபகாரத்தால் சகல காரியங்களும் சாத்தியமாகும். வரவு செலவு சமமாக இருக்கும். இல்லறம் ஓங்கும். கடன் நிவர்த்தியாகும். தெய்வபலம் முன்னின்று காக்கும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சகல காரியங்களும் தவக்கத்தோடு சாத்தியமாகும். வரவு செலவு சமமாக இருக்கும். அடிக்கடி மனம் சஞ்சலம் அடையும். வைத்தியச்செலவு அதிகமாகும். தெய்வ பலத்தாலும் நல்லோர் பெரியோர்களின் ஆசிர்வாதத்தாலும் சர்வமும் சகல காரியங்களும் சுபமாக முடியும். தெய்வபலத்தோடு இருப்பவர்கள் பூரணமான சுபத்தை அடைவார்கள். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும் ஸ்தாவர ஜங்கம சொத்துக்களாலும் விவசாயத்தாலும் கொஞ்சம் கவலையை உண்டுபண்ணும். செலவினங்கள் அதிகமாகும். சதா தெய்வ சிந்தனையோடு இருப்பவர்களும் தான தர்மங்களையும் புண்ணியமான காரியங்களையும் செய்துகொண்டு இருப்பவர்கள் எல்லோரும் நன்மையை அடைவார்கள். எதிர்பாராதபடி ஜீவனம்மூலம் விசேஷ லாபம் உண்டாகும். தெய்வசக்தி ஓங்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுமாரான பலனைத்தரும். உத்தியோக லாபமூலமாய் இடம் மாறுதல் ஏற்படும். மேல்

பதவி கிடைக்கும். வம்சவிருத்தியாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். ஸ்தாவர ஜங்க சொத்துக்கள் கிரய விக்ரயம் மூலம் விசேஷ லாபம் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனூர்ராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தைத்தரும். இல்லறம் ஓங்கும். விவசாயம் மூலமாகவும் புதிதான தொழில் மூலமாகவும் விசேஷமான லாபம் ஏற்படும். புத்திரர்களாலும் மேலோர் பெரியோர்களாலும் நன்மை உண்டுபண்ணும். ஆரோக்யம் உண்டாகும். நஷ்டமான பொருள் வந்துசேரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

10. மகரம். ¾ உத்திராடம் - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். புதிதாக கிரகலாபம் ஏற்படும். விவசாயம் ஓங்கி தனதான்ய விருத்தி ஏற்படும். உத்தியோகத்தில் மேல்பதவி கிடைக்கும். அடிக்கடி பந்துமித்திரர்களுடைய சேர்க்கையும் குடும்பத்தில் விவகாதி சுபகாரியங்களும் ஏற்படும். ஆரோக்யம் தரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் ½, - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். இடம் மாறுதலோடு தொழில் விருத்தியாகும். ஆரோக்யம் உண்டாகும். சுபமான காரியங்களால் அதிகமான செலவுகள் ஏற்படும். வித்யை விருத்தியாகும். சர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கும். கிரஹபூமி லாபங்கள் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

12. மீனம். பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ண சுபத்தைத்தரும். உத்யோக உயர்வும் வித்யாவிருத்தியும் மேலோர் பெரியோர்களின் அன்பும் கிடைக்கும். சத்துருக்கள் சரண் அடைவார்கள். ஆரோக்யம் உண்டாகும் கிரகலாபமும் தனலாபமும் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு :- சௌம்ய வருடம் கார்த்திகை மாதத்தில் மாத ஆரம்பத்தில் சஸ்யாதிபதி புதன் விருச்சிகத்திலும் தான்யாதிபதி சந்திரன் மகரத்திலும் சஞ்சாரம் செய்வதாலும், 15உ முடிய குரு சுக்கிரனுக்கு 7ல் சனி இருப்பதாலும் ஷை மாதம் சஸ்யவிருத்தி தான்ய விருத்திகள் உலகெங்கும் சுபமாக இருக்கும் மழைகள், வடதேசத்தில் சில இடங்களில் எதிர்பாராதபடி அதிகமாய் ஏற்பட்டு மிகுந்த பயத்தைத்தரும். தென்நாட்டில் (தஞ்சை திருச்சி) இரு ஜில்லாக்களும் சுபிக்ஷகரமான மழைகளால் சஸ்ய தான்ய விருத்தியாகும் மற்ற பிரதேசங்களில் எப்போதும் பார்த்திராதபடி பயிர்களுக்கு அபூர்வமான வியாதிகள் ஏற்படும். தென்கோடியில் தமிழ் நாட்டில் சமுத்திர திரங்களும் இலங்கைத் திவும் மிகுந்த பயத்தைதரும் சென்ற அர்ப்பசி மாதம் போலவே தர்மம் ஜயிக்கும். பிரஜைகள் நிர்வாகிகள் பிராசீன தர்மத்தில் தலையிடாமல் தெய்வசக்தியை இழிவுபடுத்தாமல் இருந்தால் உலகம் ஓங்கி முன்னேற்றமடையும். கடவுள் காப்பார். சுபம் உண்டாகும்.

---

## விசேஷ நாட்கள்

### 10—11—69 முதல் 10—12—69 முடிய

21—11—69 பிரதோஷம்

23—11—69 திருக்கார்த்திகை ;
கணம்புல்ல நாயனர் திருநக்ஷத்திரம்

3—12—69 மெய்ப்பொருள் நாயனர் திருநக்ஷத்திரம்

4—12—69 ஆனய நாயனர் திருநக்ஷத்திரம்

7—12—69 பிரதோஷம்

9—12—69 அமாவாசை

10—12—69 மூர்க்க நாயனர் திருநக்ஷத்திரம்

11—12—69 சிறப்புலி நாயனர் திருநக்ஷத்திரம்